KALANIJ AYAM

கலா நிலயம்

V.7. No.28. 19.7.1934.

199178

KALANILAYAM தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly
வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934ஆ ஜூலை மீ 19௳ [No. 28

27 OCT 19

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 433
2. தமிழ்ப் பாடம்— நைடதம்—சளன் தூதுப் படலம். 435
3. இரவீந்திரநாதர் கட்டுரைகள் (தபோவனம்) W. E. அரியநாயகம் B.A., B.D., B. Ed, & ஆஷாதேவி M. A. 438
4. இரவொன்றிற் பல பிழைகள் (அங்கம் 4, களம் 1) Goldsmith's—"She stoops to Conquer" 439
5. மதுரைக்கோவை—(பரத்தையிற் பிரிவு) S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 441
6. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L 443
7. கம்பரும் வால்மீகியும் (சில ஐயங்களுக்கு விடை) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 447
8. வர்த்தமானம் 448

கலாநிலயம்

கல்சரை யடையும் வகை 5

தினசரி வர்த்தமானப் பத்திரிகைகள் என்றுஇருப்பவை, கொலை களவு குதிரைப்பந்தயங்களோடு நிற்காமல், பெரும்பாலும் அரசியல் ஜாதி மதம் முதலியவைகளோடு தொடர்புடைய கட்சிவாதங்களையும் மேற்கொள்வதால், கல்சருக்கு ஆதாரமாகிய தருமசிந்தனையையும் பகுத்தறிவையும் பற்றிச் சிதைத்து அவை வளரவொட்டாமல் பற்பல விதங்களில் தடுக்கின்றன. இவ் வர்த்தமானப்பத்திரிகைகளில் வெளிவருகின்ற உரைகளைப் பருகிப்பருகிச் சுழல்கின்றசுழற்சியில் தாம்செய்வன தருமமோவெனக் கருதும்வழக்கத்தைப்பொதுஜனங்கள் துறக்கின்றனர். கட்சிவாதங்கள் அடிக்கின்ற உடுக்கையால் பெரும்பாலோர் தம் பகுத்தறிவை உகுத்துவிட்டுப் பிறர்புகுத்தும் அறிவேதலைக்கேறினராய்த் தாமும் பெரிதாடி மற்றவரையும் ஆட்டங்காணல்எவ்விடத்திலும் புதுமையன்று. கட்சி எதுவேயாயினும்ஆகுக; அதன்கொள்கைகள் நல்லனவாயினும் ஆகுக,தீயனவாயினும்ஆகுக; அக்கட்சியை நடத்துவோர் உயர்ந்தபதவியில் இருப்பினும் ஒன்றுதான், தாழ்ந்தநிலையில் இருப்பினும் ஒன்றுதான்; யாதும்பேதமில்லை. பொதுஜனங்களிடத்தில்இயற்கையாயமைந்துள கல்சரம்சங்கள் கைகூடாதவாறு புரிகின்றதன்மை கட்சியென்ற பேரால் நிகழ்கின்ற.தொழில்களுக்கெல்லாம் பொதுவா யமைந்திருக்கின்றது. கட்சியின்நோக்கம் உயர்ந்ததாயிருக்கலாம்; அதனைச்சேர்பவர்களிற் சிலரேனும் உத்தமர்களாயு மிருக்கலாம், நினைத்தபடி நோக்கம் நிறைவேறி வருவதுபோலவும், சிற்சிலர் அதனால் சில நன்மைகளைப் பெற்றுவருவதுபோலவும் தோன்றினும் தோன்றலாம். மற்று, இக் கட்சிப்போரின் குழப்பங்களினிடையே எத்தனை எத்தனைபேர் தம் தருமநினைவையும்,பகுத்தறிவையும்—தெய்வபக்தியையுங்கூட- இழக்கவேவேண்டிவருகின்றது. மானுடஇயற்கை இருக்குமாறும் உலகசரித்திரம் நடக்குமாறும் நுனித்துணர்ந்தவர், கட்சிவாதத்தால் மானுடவாழ்க்கையின் தூய்மைதொலைந்தொழியுமென்பதைமறக்கமாட்டார். வாழ்க்கைத்தூய்மை தொலைந்தபின் எதுபெற்றாலென்,எதுஒழிந்தாலென்! 'பெற்றாலென்' என்று கூறினோமெனினும்பெறுவதற்கொன்றுளதென்று நாம் கனவிலும் நினைக்கவில்லை. "பெறுவதற்கில்லையா! இங்கிலாந்தைப் பார்" என்பவர், கார்லைல் ரஸ்கின் ஆர்னால்ட் முதலான மெய்யறிவாளர்களைப்போய்க் கேட்கட்டும். அவர்களது உரைகளின் அருமையைத் தெரிந்துகொள்ளத்தக்கதேர்ச்சி உள்ளாராயின்பிறகு அந்நல்லோர்சொன்ன பொருள் இவர் உள்ளத்தைவிட்டு ஒருபோதும் நீங்காது.

கட்சிப்போராட்டங்களினால் மாந்தர்களது இயற்கையாய நற்குணங்கள் மெலிவடையுமென்னும் வாய்மையை, ஆசையு மச்சமு மின்றி நின்றுரைத்த வீரர்களுள், இற்றைக்கு நூறாண்டுகளுக்குமுன் அமெரிக்காவிலிருந்த பெரியார் வில்லியம் எல்லெரி சானிங் என்பவரும் ஒருவர். அவரையே இங்குஇவ்வுண்மையைச் சொல்லவைப்போம்:—

"நமது கட்சியமைப்புக்கள் நம்மை உயர்த்

துவதில்லை; அன்னதற்குக் காரணமும் வெளிப்படை. கட்சியின்பால்உள்ள ஊக்கத்தின் வன்மையே அக்காரணம். இவ்வூக்கம்யாவற்றையும் பொசுக்கிவிடுகின்றது ; கல்சருக்குக் கூற்றுவனாயிருப்பதும் இதுவே. ஆதலின் நற்கதி யடைய வேண்டுமென்ற விருப்பமுடையோர் யாவரும் இக் கட்சியென்னுந் தீயில் கைவைக்கலாகாது என்பதைஅறிவுறுத்தவேண்டியது என்கடமை ஆகின்றது. இதுவோ உங்கள் தேசத்தை நாசம் செய்துவிடும் என்பது மாத்திரமன்று—அதனினும் கொடியதோர் போர்க்கோலம் பூண்டது இக்கட்சி-உங்களையே படுநாசமாக்கிவிடும். வாய்மை, நியாயம், கரவிலாநெஞ்சம், தரும ஒழுக்கம், பகுத்தறிவு, அடக்கம், அன்பு என்னுமிவைகளை ஒருங்கே வாயிலே போட்டுக்கொள்ளும் யமன் இதன்றி வேறில்லை.

"உங்களைச் சுற்றி விவகரிக்கின்ற கட்சிகள், கொள்கைகளாலும் கையாளும்முறைகளாலும் வேறுவேறாகத் தோன்றினாலும், ஒருவிதத்தில் அவைகளெல்லாம்ஒற்றுமையாகவேஇருக்கின்றன. கட்சியின் பேரால் பேரிடுகின்ற ஊக்கம் கொள்ளைநோய்போல அவைகள் யாவற்றையும் பற்றித் தலைவிரித்து ஆடும்படிசெய்கின்றது. நல்லதோ கெட்டதோ, ஒருகருமத்தை முன்னிட்டுச் சிலர் கட்சி கூடியதும், இதற்குஎதிர் வேறு சிலர் மற்றொரு கட்சி சேரவேண்டியது இன்றியமையாததாகின்றது. இவ்வாறு இரண்டுகட்சிகள் எதிரெதிரே பாய்ந்து மோதிக்கொள்ளும்போது, ஆதியில் எந்த நோக்கங்கொண்டு கட்சி சேர்ந்தனரோ அந்நோக்கம்அடியுடன்மறைந்தகல, இருதிறக் கட்சியினோர் மனத்திலும் புதியதோர் விகாரம் புகுந்தியக்கத் தலைப்படுகின்றது. தம்மிலிருந்துமாறுபடுவார்மாட்டுத் தாங்கமாட்டா வெறுப்பொன்று தோன்றி மிகவும் மூர்க்கமான ஊக்கத்தோடு யாவருங்கண் டஞ்சும்படி விவகரிக்கக் காண்கின்றோம். இதனைவிடஇரக்கமற்றதும் வன்மமுடையதுமான மனோவிகாரம் மானுடஇயற்கையில் இருக்க இயலாது. தன்னுடைய தனிலாபத்தைத் தேடியும் தன்னுடைய தனிக்கொள்கையை நாட்டவும் தன்னந்தனியாக முயல்கின்றவனுக்கே தன், கர்வம் பிடிவாதம் எவ்வகையிலாவது வெற்றிபெறவேண்டும் என்ற ஆசை, கோபம், முதலிய உணர்ச்சிகளை எல்லைக்குள் அடக்கிவைத்துக்கொள்வது எளிதன்று. எனின், இன்னவர்பலர் ஒருகும்பல்கூடிப் போராடப் புகுந்தால் என்னாம்! அக்கும்பலிற் சேர்ந்துள்ள ஒவ்வொருவனும் மற்றெல்லாருடையமூர்க்கத்தையும் பிடிவாதத்தையும் பழிவாங்கவேண்டுமென்ற நினைவையும் ஒருங்கே தனக்குள்பெற்றுக்கொண்டவனாகின்றான். முதலில் மாறுபடுவதற்குக் காரணமாயிருந்த அக்கொள்கை பொய்யேனும்மெய்யேனும், இப்பொழுது அக்கொள்கையெல்லாம் போய்விட, தன் கட்சிஜயிக்கவேண்டுமென்றஆர்வமே பன்னூறுமடங்கு இவனுக்கு அருமையாய் முன்வந்து நிற்கின்றது. எதிரெதிர் கொள்கைகளால் மாறுபட்டுநின்றவர் இப்பொழுது கைகலந்து போராடத் தலைப்படுகின்றனர். இப்போரும், ஒருகொள்கையை நிலைநிறுத்துவதற்கன்று, ஒரு முறையை நடத்திவைப்பதற்குமன்று—அதிகாரமும் ஜயமும் அடையவேண்டுமென்பதே கருத்துமுற்றக் குடிகொள்ளலாகின்றது. ஆகவே, எவ்விதத் தீத்தொழிலுக்கு மஞ்சாது செய்கின்ற இத்தகைய போராட்டத்தின் துன்மார்க்கமே எத்தேய எக்கால சரித்திரத்திலும் பாடப்பெற்றுள பெரும் 'பல்லவி' யாயிற்று..............................

"தருமத்தைச் சார்ந்து தன்னிலைநிற்கவொட்டாப் பெரும்பகை இந்தக் கட்சியுணர்ச்சி. இவ்வுணர்ச்சியை உட்கொண்டிருக்கின்ற அளவிற்கு ஏற்கவேஒவ்வொருவனும், தன் கட்சிகாண்பதையும் கேட்பதையும் மதிப்பதையும், கண்டுகேட்டு மதிக்கின்றானேயொழிய, அவனுடைய சுயஅறிவும் பொறியும் இயற்கைத்தொழிலும் ஒளியும் மழுங்கினவன் ஆகின்றான். தன் மதிக்குத் தக்கதென்று தோன்றுவதைத் தெரிவிக்கும் உரிமையைக் கட்சியின் கூக்குரலுக்குப் பலியாக்கிவிட நேர்கின்றது. தலைவர்களும் கட்சியூக்கம்மிகுந்த மற்றவர்களும் எந்தவிதக்கூக்குரல் தற்காலம்நாட்டில் முழங்கவேண்டியதுதம்கருத்திற்கு உதவியாயிருக்குமென்று கிளப்பி விட்டுவிடுகின்றனரோ, அதனையே அக்கட்சிக் கும்பலிலுள்ள எல்லோரும் கூவித்திரியக்கற்பதல்லாமல் வேறில்லை. எந்தவிதத்திற் பார்த்தாலும் கட்சியை நம்பலாகாது; அதுவும், எதிர்க்கட்சியினர்களது குணம் ஒழுக்கம்முதலியவைகளைப்பற்றிச் சொல்வதை ஒருபோதும் நம்பலாகாது."

* * *

ஜானிங் இங்குமிகச் சுருங்கச் சொல்லியுள்ள ஒவ்வொன்றிற்கும் விரிவுரை உதாரணம் முதலியன இந்நாள் எத்தேயத்துப் பொதுஜன வாழ்க்கையும் பற்றியுழக்கும் கட்சி வாதங்களில் யாவரும் கண்டுவருகிறாராதலின் நாம் மேலுஞ்சில சொல்லல்மிகை. மற்றபடி யோக்கியர்களாயும் கற்றவர்கள் என்று கருதப்படும் இனத்தைச் சேர்ந்தவர்களாயும் இருப்பவர்கள்பலர் தேர்தல்காலங்களில் தகவிலாச் செயல்களும் மொழிகளும் சூழ்வதன் காரணம் இதுவாயின், பேதைக் கல்சர், பாவம், இக் கட்சிக்குமுன் நிற்பதெங்ஙனம்!

இத்தகைய கட்சிப்போரில் கொண்டுபோய் ஆழ்த்துவதற்குரிய சாதனங்களுள் முக்கியமானதாய் வர்த்தமானப் பத்திரிகைகள் பெரும்பாலும் நடமாடுவதால் கல்சரை அடையும்வகை நாடுவோர் அவைகளை அஞ்சவேண்டுவது அவசியமாகின்றது. ஜானிங் அரசியல்கட்சிகளைக் குறித்துபேசினாராலும், அவ்வுரை ஜாதி மதம் சீர்திருத்தம் முதலிய எல்லாக் கட்சிகளுக்கும் பொருந்தும். ஆதலின், தம்முடையகல்சரை நாடுவோரெலாம் தெய்வவிச்[illegible] தருமநீதி பகுத்தறிவு ஆகிய இயற்கையிலமை[illegible]

m211,n21KN

யாமல் காத்துக்கொள்ளுங் கடமை பெரியது உடையவராயிருக்கின்றனர். தம்முடைய கல்சரைநாடுவாரன்றிப் பொதுஜன நன்மையை எய்துவிப்பார் பிறரிலர்.

வேறு கூறுவானேன். கட்சி கூடுவதெல்லாம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கே. நாட்டில் தன் கட்சிக்கு அதிகாரத்தையும், கட்சிக்குள் தனக்கு அதிகாரத்தையும் ஒவ்வொருவனும் தேடுகின்றான். ஒருகட்சி தருமக் கொடியை உயர்த்தியிருப்பதாகச் சொல்லலாம்; அக்கொடியில் தியாகமே தீட்டியிருப்பதாகக் காட்டலாம். அப்பொழுதும் அத்தருமத்தை நிலைநிறுத்தித் தியாகங்கள் செய்யக்கூடியவர்களாவதற்கு அதிகாரம் வேண்டாவோ என்னுங் கருத்தை அக்கட்சியின் நடமாடத்தில் நன்கு காணலாம். இவ்வதிகார ஆசையோ அனர்த்தமே விளைக்கும். இலக்கியச் சுவையில் தேர்ந்த வில்லியம் ஹாஸ்லிட், "அதிகார ஆசையானது அனர்த்தம் செய்யவேண்டுமென்றவொரு ஆசைக்கமைந்த மறுபெயரே என்பதை ஷேக்ஸ்ப்பியர் அறிந்திருந்தார்"-(Shakespeare knew that love of power is only another name for love of mischief) என்று கூறியிருப்பதன் உண்மையை உய்த்துணர்ந்தவர், கட்சியமைப்புக்களையும் அவைகளை வளர்க்கும் வர்த்தமானப் பத்திரிகைகளையும் கண்ணெடுத்துப் பார்த்துத் தம் கல்சரை அவித்துக்கொள்ளமாட்டார் என்பது திண்ணம்.

தமிழ்ப்பாடம் 128.

நைடதம்—நளன்தூதுப் படலம்

[428-வது பக்கத் தொடர்ச்சி]

மாயிரு ஞாலத்து வந்து மன்னர்கோ
னேயபே ரழகுகண் டிமைப்பி னாட்டமோ
ராயிரம் பெற்றபே றடைந்து ளேனெனச்
சேயுயர் விசும்பினுக் கிறைவன் செப்பினான். 8.

இதுமுதல் ஐந்து கவிகளில், நளனுடைய அழகைக் கண்டு வியந்த தேவர்கள் தம்முள் உரையாடிக்கொள்வது கூறப்படுகின்றது.

(உரை) "மா இரு - மிகவும் பெரிய, ஞாலத்து - பூமியில், வந்து - வந்து, மன்னர் கோன் - அரசர்க்கு அரசனாகிய இவனது, ஏய - பொருந்திய, பேர் அழகு கண்டு - பெரிய அழகைக் கண்டதால் நான், இமைப்பு இல் - இமைக்காத, நாட்டம் ஓர் ஆயிரம் - ஆயிரம் கண்கள், பெற்ற பேறு- பெற்றிருந்தாலும் ஒரு பாக்கியத்தை, அடைந்துளேன் - இன்றைக்கு எய்தினேன்", என - என்று, சேய் உயர் - தூரத்தில் உயர்ந்திருக்கின்ற, விசும்பினுக்கு- ஆகாயத்திற்கு, இறைவன்- தலைவனான இந்திரன், செப்பினான் - கூறினான்.

விரிவுரை:—பொன்னுலகத்தில் வாழ்கின்ற இந்திரன் மண்ணுலகத்திற்கு வந்தது தாழ்வாகும். அவன் செய்த தீச்செயலின் சாபத்தால் அடைந்த ஆயிரம் கண்கள் இருப்பதும் குற்றமே. "ஆயினும், இக்குற்றங்கள்இருப்பதாலன்றோயான் இன்று நளனுடைய அழகை முழுவதும் பார்க்க இயன்றவனாயினேன்" என்னுங் கருத்து இச்செய்யுளில் அடங்கியிருக்கின்றது. ஆதலால் இச்செய்யுள் இலேசஅணியின்பாற் படும். ஒரு குற்றத்தால் குணம் விளைந்ததாகவேனும், அல்லது, ஒரு குணத்தினால் குற்றம் விளைந்ததாகவேனும் திறம்பட அமைத்துச் சொல்வது இலேச அணியாகும். ஆயிரங்கண்களுடைமை இந்திரனுக்கு ஓர் குற்றம்; அக்குற்றத்தால் நளனது அழகை முழுவதும் பார்க்கலாயது குணம். இவ்வாறின்றி ஈராயிரம் கண்களுடைய ஆதிசேடன் இதையே உரைத்திருப்பானாயின், அக் கண்களுடைமை அவனுக்கு யாதுங் குற்றமில்லை யாகையால், அது இலேச அணி ஆகாது. விரகவேதனையுற்றிருந்த தமயந்திக்குத் தோழியர் முதலினோர் அன்புடன் செய்த சீதளோபசாரங்களினால் அவளது துன்பமே பின்னும் அதிகரிக்க அவள்,

சீதையொருத்திகாதலரைத்தணந் துளாரிற்சிறப்புடையள்
ஆதலுணர்ந்தேமருங்கிருந்தோரரக்கமாதராதலினாற்
காதலுளர்போல்தோழியர்சூழ்ந்திவ்வாறியற்றிற்கழிதய [ரால்
ஏதமுழந் துள்ளுயிர்சோருமென்போலயர்வுற்றிருப்பாளே.

என்று புலம்பினாள் என இந் நைடதத்தில் சந்திரோபாலம்பனப் படலத்தில் வந்திருக்கின்ற செய்யுளும் இலேச அணியை உட்கொண்டது. "நாயகனைவிட்டுப் பிரிந்திருந்தவர்கள் எவரினும் சிறப்புடையவள் சீதை ஒருத்தியே என்பதனை இப்பொழுது உணர்ந்தேன்; ஏனெனில் அப்பொழுது அவளைச் சூழ்ந்திருந்தவர் இரக்கமற்ற அரக்கமாதர்களேயொழிய, பரிவுடன் துயர்நீக்க முயல்கின்ற தோழிமார்களல்லர். மற்று, எனக்கு உபசாரம்செய்யும் இத்தோழியர்போல் அவளுக்கும் இருந்திருப்பார்களாயின், பொறுக்கமாட்டாத் துயரடைந்து உயிர்சோகின்ற என்னைப்போல் அவளும் அயர்ந்திருப்பாள்", என்பது இச் செய்யுளின் பொருள். இதனில் இரக்கமற்ற அரக்கியர்களால் சூழ்ந்திருப்பது ஒரு குற்றமாயிருக்க, அக்குற்றத்திலிருந்து, துன்பம் அதிகமாகாததாகிய குணம் சீதைக்கு வாய்த்ததென்றும், பரிவுடைய தோழிமார்கள் இருப்பதாகிய குணத்தினால் தனக்குத் துன்பந் தான் அதிகரிக்கின்ற குற்றமே ஏற்பட்டதென்றும் தமயந்தி திறமையுடன் காட்டுகின்றாளாதலால் இது இலேசவணி ஆகின்றது.

குறிப்பு:—

மா + இரு = மாயிரு—நிலைமொழி ஆகார உயிர் ஈறாயிருக்க வருமொழிமுதல் உயிர் வகர உடன்படுமெய்பெற்றுப் புணரவேண்டியதுவிதி. (6-715) ஆயினும் இங்கு மா என்பது உரிச்சொல்லாதலால் அவ்விதிக்கு மாறாக யகர உடன்படுமெய் பெற்றுப் புணர்ந்தது (6-760).

பேறு + அடைந்துளேன் = பேறடைந்துளேன்- நிலைமொழி ஈற்றில் றகரமெய்யின்மேல்ஏறியநெடிற்றொடர்க் குற்றியலுகரம் இருப்பினும், இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலால் அந்த றகரமெய் இரட்டவில்லை. (6-891)

மண்டமர் கடந்தவேன் மன்னர் மன்னனைக்
கண்டுமற் றொருவர்தோள் காமுற் றீர்ந்தொடை
தொண்டைவாய் மடமயில் சூட்டு மோவெனத்
தெண்டிரைக் கனைகடற் செல்வன் கூறினான் 9

(உரை) "மண்டு-நெருங்குகின்ற, அமர் - போரை,

கடந்த - வென்ற, வேல் - வேலையுடைய, மன்னர் மன்னனை - அரசர்க்கு அரசனாகிய இவனை, கண்டும்- பார்த்தபிறகும், மற்றொருவர்- வேறு ஒருவருடைய, தோள் - தோள்களை, காமுற்று - ஆசைப்பட்டு, தொண்டைவாய் - கொவ்வைக்கனிபோன்ற வாயை உடைய, மட மயில் - இளமைபொருந்திய மயிலின் சாயலை உடைய தமயந்தியானவள், ஈர்ந்தொடை - குளிர்ச்சிபொருந்திய சுயம்வரமாலையை, சூட்டுமோ- சூட்டத்தான் சூட்டுவாளோ,'' என - என்று, தெள் திரை- தெளிந்த அலைகளை உடைய, கனைகடல்-ஒலிக் கின்ற கடலுக்கு, செல்வன்- தலைவனாகிய வருணன், கூறினான் - சொன்னான்.

கருத்து:—தமக்கு முன் எதிர்ப்பட்ட வப் பேரழகுடைய வேந்தனும் தமயந்தியின் சுயம்வரத்திற்கே ஏகுதல் வேண்டுமென்று ஊகித்த வருணன் இவனிருக்க அத்தெரிவை தம்மெவரையும் கண்ணெடுத்துப் பாராளென் றிசைக்கின்றான்.

குறிப்பு:—

அமர் + கடந்த = அமர்கடந்த-இது அமரைக்கடந்த என்று விரியுமாகையால், இரண்டாம் வேற்றுமை உருபுமாத்திரம் தொக்கிருக்கின்றது. ஆதலால் வருமொழிமுதல்வல்லினமெய்மிகவில்லை; (7—211)

ஒருவர் + தோள் = ஒருவர்தோள் — ஒருவருடைய தோளென விரியுமாகையால் இது ஆறும்வேற்றுமைத்தொகை. அத்தொகையில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவேண்டுமென்பது பொதுவிதியாயினும் நிலைமொழி இங்கு உயர்திணையாகையால் மிகவில்லை. (7—295)

திரை + கனை = திரைக்கனை — திரைகளை உடைய கனை என்றுவிரியுமாகையால் இரண்டாம்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. ஆகையால் வருமொழிமுதல் வல்லினமெய்மிகுந்தது. (7—227)

கனை + கடல் = கனைகடல்—இது கனைக்கின்ற கடல் என்று விரியுமாகையால் நிலைமொழி காலம் கரந்த பெயரெச்சமாகவிருக்கின்றது. ஆதலின் வினைத்தொகை. வினைத்தொகையில் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது. (7—387)

பாந்தண்மேற் கிடந்தபார் பரிக்குந் திண்டிறல்
வேந்தனுக் கேதொடை வேய்ந்தி லாளெனி
லேந்திழை யெழினல மென்கோ லாமெனக்
காந்துவெங் கதழெரிக் கடவுள் சாற்றினான் 10.

(உரை) "பாந்தள்மேல், ஆதிசேடனாகிய பாம்பின் மேல், கிடந்த-இருக்கின்ற, பார் - பூமியை, பரிக்கும்- தாங்குகின்ற, திண் திறல் - திண்ணிய பராக்கிரமம் பொருந்திய, வேந்தனுக்கே - இந்த அரசனுக்கே, தொடை - மணமாலையை, வேய்ந்திலாள் எனில் - சூட்டாமற் போவாளானால், ஏந்து இழை - விளங்குகின்ற ஆபரணங்களை அணிந்த அத் தமயந்தியின், எழில் நலம் - அழகின் பிரயோசனம், என் கொல் ஆம்-என்ன ஆகும் (வீணே யன்றோ)'' என- என்று, காந்து - காந்துகின்ற, வெம் - வெப்பத்தை உடைய, கதழ் - வேகத்தையுமுடைய, எரிக்கடவுள்- அக்கினி தேவன், சாற்றினான் - கூறினான்.

விரிவுரை:—இவ்வக்கினிதேவன்சான்றவனாதலால் தன்னலம்நோக்காப் பெருந்தன்மையை நன்கு காட்டுகின்றான். பேரழகுடைய அம்மன்னனைக்கண்டபின் தமயந்தி தமக்கு மாலையிட இசையாள்என முன் வருணன் உரைக்க, அக்கினிக்கடவுள் அவ்வாறு அவள் இசைந்தாளாயினும், அதனால் அவளழகெலாம் பாழாகுமேயென இரங்குகின்றான்.

குறிப்பு:—

கிடந்த + பார் = கிடந்தபார்—பெயரெச்சத்தொடர், ஆதலின் வலி மிகவில்லை.

வேந்தனுக்கு ஏ + தொடை = ஏகார இடைச்சொல்லுக்குப்பின் வருமொழிமுதல்வல்லினமெய் மிகாது—இந்த ஏகாரம் பிரிநிலைப்பொருளது.

ஏந்து + இழை = ஏந்திழை—இது ஏந்தியஇழைஎன விரியும் (ஏந்திய = நிமிர்ந்த), ஆகையால் வினைத்தொகை. ஆயினும் ஏந்திய இழை என்பதோடு நில்லாமல், ஏந்திய இழைகளை அணிந்தவள் என்று இறுதியிலும் விரியவேண்டியது தமயந்தியைக்குறிப்பதற்குரிய பொருளிற்கு இன்றியமையாததாகையால் இது வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

ஏந்து + இழை = ஏந்திழை என்றானது நிலைமொழி ஈற்றிலுள்ள குற்றியலுகரம் கெட அது நின்றிருந்தமெய்யின்மேல் வருமொழிமுதல்உயிர்ஏறியது (6—859).

எரி + கடவுள் = எரிக்கடவுள்—இது எரியாகிய கடவுள் என விரியும் (எரி-நெருப்பு). எரி என்பது இங்குப் பெயர்ச்சொல். நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் ஆகிய என்னும் பண்புருபு தொக்கிருப்பதால் இது பண்புத்தொகை. அதனிலும் வருமொழி, பலதேவர்களைப்பொதுவாகக் குறிக்கின்ற கடவுள் என்னும் சொல்லாயிருக்க நிலைமொழி அப்பொதுமையைநீக்கி எரி என்று சிறப்பித்துக்காட்டுவதால் இது, சாரைப் பாம்பு என்பதுபோல் இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகும். (6—409.) இதை வினைத்தொகையோ என்று மயங்கப்படாது. வினைத்தொகையாயின் வல்லினம் மிகாமல் எரிகடவுள் என்று நிற்றல்வேண்டும். அப்பொழுது எரிஎன்பது வினைச்சொல்லாகி அத்தொடர் எரிகின்ற கடவுள் என விரிதல் வேண்டும்.

இலக்கணம்

யகரமெய் தவிர மற்றெல்லா மெய்யீறுகளும், வருமொழி முதல் யகரமெய்யோடு புணருங்கால் இகரம் தோன்றினுந் தோன்றலாமென்பதை முன்வாரப் பாடத்தில் கூறினோம். இனிச் சிற்சில மெய்யீறுகளைத் தனித்தனியாக எடுத்துக்கொண்டு வருமொழிமுதலில் வரக்கூடிய வெவ்வேறு மெய்கள் புணர்தற்குரிய விதிகளைப் பார்த்தல்வேண்டும்.

B. யகர, ரகர, ழகர மெய்யீறுகள்.

1. இவ்வீறுகளும் + வருமொழிமுதலில்வல்லினமெய்யும்:—இவ்வீறுகள், உயிரீற்றுச் சொற்களைப் போலவே வருமொழிமுதல் வல்லினமெய்யோடுபுணரும் என்பதை முன்னர்ப் பலவிடங்களில் கூறியிருக்கின்றோம். அதன்படி, முன் கூறப்பட்டிருக்கின்ற விதிகள்யாவும் உயிரீற்றிற்கும் யகர ரகர ழகரமெய்யீறுகளுக்கும் ஒக்குமென்பதோடு ஆங்காங்கு உதாரணங்களும்காட்டி முடித்திருக்கிறோமாதலால் மீண்டுமவைகளை இங்குக் கூறவேண்டியதில்லை.

நகை + பெட்டி = நகைப்பெட்டி — உயிரீற்றின் முன், இரண்டாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகையில், வல்லினமெய் மிகுந்தது.

அவ்வாறே,

கூழ் + சட்டி = கூழ்ச்சட்டி
தேர் + கயிறு = தேர்க்கயிறு
பாய் + கடை = பாய்க்கடை

என, யகர ரகர ழகர மெய்களின் முன்னும்இரண்டாம்வேற்றுமை உருபும்பயனுமுடன்தொக்க தொகையில் வருமொழி முதல் வல்லினமெய்கள் மிகுந்தன.

இவ்விதமே மற்றவிதிகளையும் அவ்வவைகளுக்கு ஏற்றஉதாரணங்களையும் முன்னையபாடங்களினின்று எடுத்து ஒப்புநோக்கித் தெளிந்துகொள்க.

எனினும், உயிரீற்றுப் புணர்ச்சியோடு ஒவ்வாமல் இம்மெய்யீறுகள் வல்லினமெய்யோடு புணர்தற்குரிய விதிகளும் சிலஉள. அவைகளை இங்குக் கூறுவோம்.

(a) முன்னுரைத்த விதிகளின்படி வருமொழிவல்லினமெய் மிகவேண்டிய இடங்களில், யகர ரகர ழகர மெய்யீறுகளுக்குமுன் வருகின்ற வல்லினமெய்களுக் கினமான மெல்லினமெய்கள் மிகுகின்ற வழக்குக்களுந் தமிழில் சில இருக்கின்றன:—

வேய் + குழல்—இது வேயினால் (வேய் = மூங்கில்) செய்த குழல்என்று விரியுமாகையால் மூன்றும் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்கதொகை; ஆதலின் வருமொழி முதல் வல்லினமெய் மிகுந்து வேய்க்குழல் என்று புணர்தல் வேண்டும் (7-243). அப்படிப் புணரலாம்; ஆயினும் அதுவுமன்றிக் ககரமெய்மிகுவதற்குப்பதிலாய், அந்த வல்லினமெய்க்கு மெல்லினஎழுத்தாகிய ஙகரமெய்மிகுந்தும் புணரலாம். எனின், வேய்ங்குழல் என்றாகும்.

ஆர் + கோடு = ஆர்க்கோடு, ஆர்ங்கோடு. ஆர் என்பதற்கு, ஆத்திமரம் என்பது பொருள்; கோடு என்றால் கிளை. இது ஆறும்வேற்றுமைத் தொகை. வருமொழிமுதல் ககரமெய்யேனும், அல்லது அதற்கினமான ஙகரமெய்யேனும் மிகலாம்.

வீழ் + குறை = வீழ்க்குறை அல்லது, வீழ்ங்குறை. (வீழ் = ஆலம்விழுது) ஆறும்வேற்றுமைத்தொகை. வருமொழிமுதல் ககரமெய்யேனும் அல்லது அதற்கினமான ஙகரமெய்யேனும் (மெல்லினம்) மிகலாம்.

அவ்வாறே,

பாழ் + கிணறு = பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு.
பாழ் + பிணம் = பாழ்ப்பிணம், பாழ்ம்பிணம்.

இதனில், பகரத்திற்கினமாகிய மகரமெய் மிகுந்தது.

பாழ் + சேரி = பாழ்ச்சேரி, பாழ்ஞ்சேரி.
கூர் + கொடு = கூர்க்கோடு, கூர்ங்கொடு.

என வருதல் கூடும்.

குறிப்பு:—இவ்விதம் வல்லினமேனும்அதற்கு இனமான மெல்லினமெய்யேனும் மிகுந்து வர இயலுமாயின் அதனை உறழ்தல் என்பர். இவ்வாறு உறழ்வது பெரும்பாலும் வேற்றுமைத் தொகைகளிலும் பண்புத்தொகையிலுமே நேரக் காண்கின்றோம். உறழ்ந்து வரலாம் என்றதனால் நமது இஷ்டப்படி புணர்த்திக் கொள்ளலாம் என்றெண்ணின் பிழையாம். பார்ப்பொறை என்பது ஆறும்வேற்றுமைத் தொகையாயினும் பார்ம்பொறை என உறழ்ந்துவரக்கண்டதில்லை. இவ்வாறே உறழாதன எண்ணிறந்தன. ஆதலின் ஆன்றோர்வழக்கிற்கிணங்கியே சொற்றொடர்களை உறழக் கொள்வது நலம்.

(b) வினையெச்சத்தொடரில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுமென்று முன்னர்க் கூறியுள்ளோம். (3-434) ழகரமெய்யை ஈற்றிலுடைய வினையெச்சங்கள் இல்லை. போய்ச்சொன்னான், என்பதுபோல் யகரமெய்யை யீற்றில் உடைய வினையெச்சங்களின்பின் மிகும். செய்யியர் என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள் ரகரமெய்யை ஈற்றில்பெற்று வரக்கூடும். இவைகளுக்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

காணியர் + சென்றேன் = காணியர் சென்றேன்
உண்ணியர் + தந்தேன் = உண்ணியர் தந்தேன்.

குறிப்பு:—காணியர், உண்ணியர்— என்பதற்குக் காணும்பொருட்டு, உண்ணும்பொருட்டு என்பது பொருள்.

(c) உயிரீற்றுப்புணர்ச்சிவிதியினின்று வேறுபட்டு நடக்கும் சொற்கள் சிலவுள.

(1) தாய் என்ற சொல்லின்பின் வரும் வல்லினமெய் ஆறும் வேற்றுமைத் தொகையினும் மிகாமல் இயல்பாய்ப் புணரும்.

தாய் + கை = தாய்கை
தாய் + தலை = தாய்தலை.

(2) தாழ்என்ற சொல்லிற்குப்பின் கோல் என்னுஞ் சொல் வருமாயின், அவை 'தாழ்க்கோல்' (தாழைத் திறக்குங்கோல்) என்று வல்லினம் மிகுந்து புணர்வதோடு, தாழக்கோல் (தாழ் + அ + க் + கோல்)என்று அகரச்சாரியையும் பெற்றுப் புணரலாம்.

(3) கீழ் என்ற சொல்லிற்குப்பின் வல்லினம், மிகவேண்டியதொடர்களில் மிகுந்தும் மிகாமலும் புணரலாம்.

கீழ் + குலம் = கீழ்க்குலம், கீழ்குலம்.
கீழ் + பாடி = கீழ்ப்பாடி, கீழ்பாடி.
கீழ் + துறை = கீழ்த்துறை, கீழ்துறை.

குறிப்பு:—தாய், தாழ், கீழ், என்ற இம்மூன்று சொற்களுக்கே இங்குக் குறித்த இவ்விதிகள் உரியவை. ஏனையசொற்களெல்லாம் பொதுவிதிகளின்படி புணரும்.

கலா நிலயம் முன்னைய வால்யூம்கள்.

1928, 1930, 1931, 1932, 1933 வருடத்திய வால்யூம்கள் வேண்டுவோர் உடனே பெற்றுக்கொள்வது நலம்.

வால்யூம் ஒவ்வொன்றின் விலை:—பைண்ட் செய்யாதது. ரூ. 7-8-0 ஆஃப் லெதர் கில்ட் பைண்ட் செய்தது. ரூ 9-0-0. தபால் அல்லது ரயில் கட்டணம் வேறு.

இரவீந்திரநாதர் கட்டுரைகள்

தபோவனம்

[407-வதுபக்கத் தொடர்ச்சி]

உஜ்ஜினியைத் தலைநகராகவும் விக்கிரமாதித்தனை மன்னவனாகவும் காளிதாஸனைக் கவியாகவும் கொண்டிருந்த காலத்தில் இப் பாரதநாட்டின் தபோவனயுகம் முடிந்துவிட்டதென்று கூறலாம். மனிதர் தம்முடைய வாழ்க்கையையே ஒரு பெரும் திருவிழாவாக நடத்தி மகிழ்ந்திருந்தகாலம் அது. சீனர் கூனர் சிக்கியர் பாரஸீகர் கிரேக்கர் ரோமர் அனைய சாதியார் பலர்பலர் அப்பொழுது இந்தத்தேயத்தினுள் சூழ்ந்து நெருங்கினர். அக்காலம், அரசர் ஒருபக்கம் யானைத் துதிக்கை போன்ற தம் பெரிய கைகளால் தாமே ஏர் பிடித்துப் பயிர்செய்துகொண்டிருந்தனர்; மறுபக்கம், மெய்யறிவு பெறவேண்டுமென்னும் அவாவுடையவர்களாய் நானாதேசங்களிலிருந்து இந்நாட்டை நாடினவர்களுக்குப் பிரம்மஞானத்தைப் போதித்துக்கொண்டிருந்தனர். அத்தகையவோர் அரியகாட்சியைக் காணக்கூடிய காலம் அதன்பின் ஏற்படவில்லை. ஆயினும், செல்வவெறிகொண்டு செம்மாந்திருந்த அக்காலத்திலும், தபோவனம் கண்களுக்கெட்டாமல் அகன்றுவிட்டபோதிலும், மதுரமான அதன்நினைவு மனிதர் இதயத்தில் மிக மிக ஆழ்ந்து பதிந்திருந்ததென்னும் உண்மையை, அக்காலத்துக் கவிவரன் காளிதாஸன் தபோவனத்தை வருணித்திருக்கின்ற வகையினின்று இனிது தெரிந்துகொள்ள இயலும். பாரதநாட்டு மேன்மையை உணர்ந்து உணர்த்துகின்ற கவிஞர் ஏனையோரிலும் காளிதாஸன் மிகச் சிறந்த முதலிடம் பெறுவதை அவன் தபோவனத்தை மேன்மைப்படுத்தி இயற்றிய பாகங்கள் நிலைநிறுத்துகின்றன. தபோவன மகிமையை அவனைப்போன்ற அடங்காத ஆனந்தமுடன் சித்தரித்துத்தந்த சிறப்புடையோர் வேறிலர்.

இரகுவம்ச நாடகத்தின் திரை எழுகின்றபோதே தபோவனத்தின் அழகும் அமைதியும் தூய்மையும் தங்கியவோர் காட்சி நம் கண்முன் பொலிகின்றது. அறுகும் விறகும் அருந்தீங் கனிகளும் திரட்டி அத்தபோவனத்திற்குக் கொணர்கின்றனர் தவசிகள். அவர் வளர்க்கின்ற அக்கினி ஆங்காங்குக் கண்ணுக்குத் தெரியாமலிருந்து அவர்களை வரவேற்கின்றது. முனிவர்மனைவியர் வளர்க்கின்ற மகவுபோல் மானினங்கள் அவர் கொடுக்கும் புல்லும் நெல்லு முண்டு அச்சமின்றி முன்றிலில் படுத்திருக்கின்றன. முனிவர்தம் கன்னியர் மரங்களுக்கு நீர் வார்த்துப் பாத்திகள் நிறைய நிறைய அகன்று செல்கின்றனர். பாத்தியில் தேங்கிய நீரைப் பறவைகள் கவலையின்றிக் குடிக்கவரும். ஆராதனைகள் புரிகின்ற அக்கினியிலிருந்து எழுகின்ற நன்மணமான தூமங்கெங்கும்பரவி, ஆசிரமத்தைநாடிவந்த விருந்தினர்தம் உள்ளும் புறமும் தூய்மை செய்கின்றது. புல் பூண்டு செடி கொடி மரம் பறவை மிருகம் அனைத்துடனும் மனிதன் ஒற்றுமைகொண்டு பூரணமடைந்திருக்கின்ற சிந்தனையே இதன் உள்ளான சிந்தனையாம்.

சகுந்தலை நாடகத்தில், செல்வமும் சிற்றின்பமும் நிறைந்தவோர் அரசவாழ்க்கையில் நிந்தனைக்கு உரியவைகளை விலக்கிவிட்டு நோக்குங்கால், தவவனத்து வாழ்க்கையின் தூய்மை அழகுறக் காட்டப்பெற்றிருப்பதைக் காணலாம். சராசரங்கள் அனைத்துடனும் மனிதர் நெருங்கிப்பயின்றுபெறுகின்ற உறவின் தூய்மையும்இனிமையுமே அந்நாடகம்முழுவதிலும் ஓர் உள்ளொலியாக ஊடாடி இசைக்கின்றது.

காதம்பரியிலும் தபோவனம் வருணிக்கப் பெற்றிருக்கின்றது. அங்கு, காற்றிற்கு அசையும் தருக்கள் தலைவணங்கித் துதித்துத் தம் கனிகளைச் சொரிந்து பூசைகள் செய்கின்றன. ஒருபுறம் புழுங்கலரிசி காய்வதைக் காணலாம், நெல்லி வாழை இலந்தை அனைய பழவகைகள் பல சேகரித்துவைத் திருக்கின்றனர். மாணவர் படிக்கின்ற மந்திரங்களின் ஒலியினால் நிறைந்துளது அவ்வனம். கிள்ளைகளும் அம் மந்திரங்களைப் பாடம்பண்ணி ஓயாமல் ஓதிக்கொண்டிருக்கின்றன. தேவதைகளுக்கு நைவேத்தியமாக அளித்தவைகளைக் காட்டுக்கோழிகள் உண்கின்றன. அருகிருக்கும் குளங்களை விட்டு அன்னப்பறவைகளும் வெளிவந்து இவ்வுணவினை அருந்திச் செல்கின்றன. முனிகளின் இளம் மக்களை மான்கள் தம் நாவினால் நக்கும்.

இன்னவாறு, ஏனைய பிராணிகளுடனும் பொருள்களுடனும் மனிதனுக்குள்ள வேற்றுமையை அகற்றிவைக்கும் ஒளிகொண்டு மிளிர்கின்ற தவவனத்தைச் சார்ந்த புராதன கதைகளே, அன்றுதொட்டு இன்றுகாறும், இப்பாரதநாட்டில் வழங்கிவருகின்ற மேன்மையை நினைவிற்கொள்வது நலம்.

இன்னொரு விடயமும் மறத்தலாகாது. பிரகிருதியுடன் மனிதனானவன் ஒற்றுமைகொண்டு பூரணமடைந்திருக்கின்ற சிந்தனையே இப்பாரதநாட்டின் உள்ளான சிந்தனையாமென்று முன்னர்க்கூறினோம். எனினும், காளிதாஸன் அனையவர் தவவனத்தின் பெருமையையும் அழகையும் அமைதியையும் தங்கள் காவியங்களில் சித்தரித்துக் காட்டிய காட்சியின் அளவிலேயே அந்தச் சிந்தனையின் பிரகாசம் முழுவதும் அடங்கிவிட்டதாக எண்ணலாகாது. நமது தேசத்தின் பேர்பெற்ற எல்லாக்காவியங்களிலும், மனிதருக்கும் பிரகிருதிக்கும் உள்ள ஒற்றுமை விளக்கமுடன் மலர்ந்திருக்கின்றது. மேனாட்டு நாடகங்களோ மனிதர்தம் குணகுணங்களையேசிறப்பாக விளக்கிக்காட்டும்படி அமைந்திருக்கக்காண்கின்றோம். ஆதலின் மேனாட்டு நாடக ஆசிரியர்கள், தம் நூல்களில், விச்வபிரகிருதிக்கு நிலைபேறுடைய இடம் ஒன்றும் அமைப்பதின்றி, அது இடையிடையே வந்து எட்டிப்பார்த்து அகன்றுவிடுகின்ற ஒரு கதியையேஅளித்திருக்கின்றனர். இதற்கு மாறாக, இன்றளவும் நம்மால் நன்கு மதிக்கப்பெறுகின்ற நம் பண்டைய இந்திய நாடகங்களில் இப்பிரகிருதி தனக்குரிய பதவியிலிருந்து ஒருபோதும் வஞ்சிக்கப்பட்டதில்லை.

பிரகிருதியானது மனிதனை எங்குஞ்சூழ்ந்திருப்பது மாத்திரமன்றி, அவனுடைய எல்லாக் காரியங்களுடனும் எல்லா எண்ணங்களுடனும் மிகவும் அந்தரங்கமானவகையில் கலந்து ஒற்றுமைப்பட்டிருக்கின்றது. மனிதர் வசிக்கின்ற இடம் முழுவதும் மனிதராலேயே அடர்ந்து, இடையிடையேனும் பிரகிருதி சிறிதேனும் உள்ளேசெல்ல வகையற்றுப்போமாயின், நம் கருத்துக்களும் கருமங்களும், படிப்படியாக அசுத்தமும் வியாதியும் அடைந்து, இவ்வண்ணம் நமக்கு நாமே உண்டாக்கிக்கொண்டவோர் ஆழமிட்டு அறியமாட்டா பதாளத்தினிடையே தற்கொலை செய்துகொள்வதாக முடியும். நமக்கிடையே இருந்து எந்நாளும் ஒழுங்குதவறாமல் தன் தொழிலைப் புரிந்துவருகின்ற பிரகிருதியானது வெளிப்பார்வைக்கோ, ஒன்றும் செய்யாமல் சும்மா நிற்பதுபோலவே தோன்றுகின்றது. இப்படி, நாந்தாம் பெரிய வேலைக்காரர்கள் போலவும், பிரகிருதியோ காரிய மில்லாத ஒரு வெறும் அலங்காரமே போலவும் தோன்றினும், இப் பாரதநாட்டுக் கவிவரர்கள், அத்தோற்றத்தின் பொய்ம்மைக்கு மோசம்போகாமல், அதன் உண்மையான தன்மையை நன்றாக அறிந்திருந்தனர். மனிதருக்கு உரிய சுகதுக்கங்களினிடையே, இந்தப் பிரகிருதி ஒற்றுமைப்படுத்திவைக்கின்ற ஓர் நித்தியத்தின் இசையையே நம் புராதனகவிகள் எப்பொழுதும் பாடிக்கொண்டிருந்தனர்.

'ருது சங்காரம்' என்னும் அந்நூலைக் காளிதாஸன் தன் இளமைப் பருவத்தில் எழுதினானென்பதற்கு யாதும் ஐயம் இல்லை. ஏனெனில், அந்நூலில், பருவமங்கையரும் இளைஞர்களும் கிளர்ந்துகொள்கின்ற காமவிழைவின் சங்கீதஸ்வரங்கள் கீழ்ஸ்தாயியில் உற்பத்தியாகி அக்கீழ்ஸ்தாயியிலேயே நின்றுவிட்டனவேயன்றி, குமாரஸம்பவம் சாகுந்தலம் அனைய நாடகங்களிற்போல், தவத்தின் மேல்ஸ்தாயிக்கு ஏறுவதைக் காண்கிலோம். இந்தப் பின்னைய நூல்கள், இளமைப் பருவத்தின் புதிய கிளர்ச்சியாக விளையும் இக்காமம் என்னும் நோயை, பிரகிருதியின் விஸ்தாரமான விசித்திர இராகத்துடன் இசைத்து ஆகாய வெளியின் இடையே அதனைக்கம்பீரமாகத்தோன்றும்படி செய்தன. அகன்றுபரந்தஇப்பிரகிருதியோடு இயற்கையாகப் பொருந்தியிருக்கின்ற ஒன்றை, பிரகிருதியோடு சேர்த்து அதன் மத்தியிலேயே பார்க்குங்கால் அது அளவுகெட்ட வொரு அவலக்ஷணமாகத் தோன்றாது. மற்று, அப் பிரகிருதியைவிட்டுப் பிரித்து, மனிதருடைய சிந்தைநிறைந்த ஜீவிய ஓட்டத்தின் இடையிலே வேற்றுமைப்பட வைத்துப்பார்ப்போமாயின், அதுதான் நோய்வாய்ப் பட்டதுபோல் வெய்யதாய் இரத்தத்தின் நிறத்துடன் தோன்றும். ஷேக்ஸ்ப்பியர், இளையருக்கும் இளைஞருக்கும் இடையே விளைகின்ற காமக்கிளர்ச்சியே விடயமாக இரண்டொரு நாடகங்கள் எழுதியிருக்கின்றார். இந்நாடகங்கள் முழுவதும், காமம் என்னும் இப் பிளவைக்கே தவிர வேறொன்றிற்கும் இடமில்லை; ஆயாயமில்லை, காற்றுமில்லை, இப்பிரகிருதியின் நிர்வாணத்தை மறைத்து மானத்தைக் காக்கவல்ல சங்கீதம் கந்தம் சித்திரம் அனைய ஆடைகள் சிறிதேனும் அந்நாடகங்களில் சம்பந்தங் கொள்ளவில்லை.

காமதேவதையாகிய மன்மதன், தபோவனத்தின் இடையே சடுதியில் தோன்றி, தவத்தில் அமர்ந்திருந்த முனிவரிடத்தில் இளமையின் கிளர்ச்சியால் விளையும் சஞ்சலத்தைக் காட்டிய செய்தி, குமாரஸம்பவத்தின் மூன்றாம் காண்டத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும், காம மென்னும் பிளவையைத் தனியே பிரித்தெடுத்து அதன் உன்மத்தத்தை ஏனையயாவற்றினும் பிரதானமாகக் காட்டவேண்டுமென்று காளிதாஸன் முயன்றானல்லன். சூரியனது கிரணங்கள் ஒன்றாகக்குவிந்து கண்ணாடி (lens) வழியாகச் செல்லும்போதுதான் தீமூட்டிஎரிக்ககூடும். அவ்வாறன்றி, அக் கிரணங்கள் ஆகாயத்தில் பரவியிருக்கும் போது, வெப்பம்தோன்றுமேயலலாமல் தீமூட்டி ஒன்றையும் எரிக்க இயலாது. அவ்வாறே, வசந்தகாலப் பிரகிருதியின் சர்வவியாபகமான யௌவன லீலைகளின் இடையே, பார்வதீபரமேச்வரர்களுடைய காதலின் திவ்விய லீலைகளை நடத்திவைத்து அதற்குரிய மகத்துவத்தைக் காளிதாஸன் பாதுகாத்தான். அம் மூன்றாவதுகாண்டம்மாத்திரம் அன்றி, அக் குமாரஸம்பவக் காவியம் முழுவதுமே, விச்வவியாபகமான ஒருபெரிய படாத்தின்மேல்எழுதப்பட்டிருக்கின்றதென்பதை அதனை ஓதுவார் உணர்ந்துகொள்வார். காதலின் நித்திய கலியாணமும், அதற்குரிய வாக்கு வசியமும் வேள்வியும், அத் திருமணம் பயனுற நிறைவேறுவதற்குத் தேவர்கள்காத்திருத்தலும் ஆகிய இவைகள் அக்காவியத்தின் உட்பொருள்கள். இவை மிகவும் அழகுடையன, என்றென்றைக்கும் உரியன. வருந்திமுயல்கின்ற பல்வகை முயற்சிகளின் மூலமாக மனிதகுலம் ஓயாமல் கேட்கின்ற ஒருகேள்விக்கு விடையளிக்கின்றது இக்காவியம்—அதர்மம் ஆகிய பாவத்தை முறியடித்து வெற்றிகொள்ளவல்ல ஒரு வீரபுத்திரனை எவ்வண்ணம் பெறக்கூடும், என்பதே அந்தக் கேள்வியாம்.

இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

அங்கம் 4. களம் 1.

[424-வது பக்கத் தொடர்ச்சி]

[டோனியும் நெவில்லியும் வருகின்றனர்]

டோனி:-சீபோ! அடுத்தமுறை உனக்காக நீயேதான் திருடிக்கொள்ளவேண்டும். என்கடமையைநான்செய்தாய்விட்டது. நகைகள் மறுபடி அவள் கைகளிற் போய்ச் சேர்ந்துவிட்டன; அது நிச்சயம். இருந்தாலும், இது அத்தனையும் ஏதோவேலைக்காரர்களின் தவறென்றே அவள் இன்னும் எண்ணிக்கொண்டிருக்கிறாள்.

நெவில்லி:—என்னவிது, என் அருமை டோனி, இந்தக் கஷ்டத்தில் எங்களை நீ கைவிடலாமா? நான் ஓடிவிடப்போகிறேன் என்ற சந்தேகம் அவளுக்குக் கடுகத்தனை வந்தாலும், பிறகு, என்னை வீட்டிலடைத்துப் பூட்டிவிடுவாளே; அல்லது, இன்னொரு அத்தையின் வீட்டிற்கேனும் என்னை அனுப்பிவிடுவாள். அதுவோ இதனினும் கேடு.

டோனி:—அது உண்மையே. அத்தைமாரில் எதுவாயிருந்தாலென்ன, எல்லா அத்தையுங் கெட்டதுதான். உங்களுக்காக இரண்டு குதிரைகள் ஆயத்தமாக் வைத்திருக்கிறேன். அம்புபோலப் பறக்கும். உன்மேல் எனக்குக் காதல் இருப்பதுபோல் அவள்கண்முன் எவ்வளவு அழகாக நடித்திருக்கிறேனென்பதை நீயே மறக்கமாட்டாய். இதோ அவளும் வந்துவிட்டாள் அவள் ஒன்றும் சந்தேகம்கொள்ளாதபடி நாம் இன்னும் இரண்டொரு ஆசைக்கொஞ்சல்கள் இப்பொழுது கொஞ்சவேண்டும்.

[டோரதி வருகிறாள்]

டோரதி:—(ஒருபுறமாய்) அப்பா! கோஞ்சநேரம் பதறிப்போய்விட்டேன் நான். ஆனால், இது வேலைக்காரர்களின் தவறுதானென்று என் பிள்ளை சொல்கிறான். இருந்தாலும் இவர் இருவருக்கும் கலியாணம் ஆகி முடிகின்றவரையில் என் கவலை நீங்காது. அப்புறம் அவள் தன் ஆஸ்தியைத் தானே வைத்துக் கொள்ளட்டுமே; யார் வேண்டாம் என்கிறது! என்ன இது நான் காண்பது. என் செல்வங்கள் இரண்டும் கொஞ்சிக்கொண்டிருக்கின்றது. டோனி இவ்வளவு உற்சாகமாயிருந்து நான் இதுவரையிற் பார்த்ததில்லை. (அவர்களைப்பார்த்து) ஆகா, பச்சைக்கிளிகளே, உங்கள் திருட்டுத்தனத்தைப் பார்த்துவிட்டேனே? என்ன கொஞ்சல், என்ன கண்களவு, என்ன முணுமுணுப்பு! ஆகா!

டோனி:—முணுமுணுப்பிற்கு என்ன குறை, அம்மா! அடிக்கடி நாங்கள் கொஞ்சம்முணுமுணுப்பது உண்டு, அது நிச்சயந்தான். ஆனாலும், எங்களிடையே அன்பொன்றும் கெடுவதற்கு இல்லை.

டோரதி:—நெருப்பின்மேல் சிறுதுசிறிதுதூவுவது அதனை அதிகமாகத்தானே பிரகாசிக்கச் செய்யும், டோனி.

நேவில்லி:—இனி வீட்டில் நம்முடனேயே எப்பொழுதும்இருந்து நம்மைச்சந்தோஷப்படுத்த நிச்சயித்திருக்கிறார் இவர். இனி இவர் அரைநிமிடங்கூட நம்மைவிட்டு வெளியே போகப்படாது. (டோனியின் கன்னத்தைத் தன் விரல்களால் மெல்லக் குத்தினவளாய்). இனி நம்மைவிட்டு இது போகாதே, சொல், போகாதே இது?

டோனி:—ஓ! ரொம்ப நல்லதாச்சே இது! என் குதிரையை நான் குட்டையில் விட்டுவிட்டு வந்தாலும் வந்துவிடேன், நீ இவ்வளவு அழகாகச் சிரித்துக் கொண்டிருக்கும்போது உன்னைவிட்டுப் போக எனக்கெப்படி மனம்வரும். உன் சிரிப்பு நிரம்ப அழகாக அமைகிறது.

நேவில்லி:—அத்தை, என் ஆசைக்கு மிகவும்பாத்திரமானவர் இவர். இயற்கையான விளையாட்டும், அகன்று சிவந்து சிரித்த, இந்த அசட்டு முகத்தைக் கண்டு யார்தான் ஆசைகொள்ளமாட்டார். என்ன கம்பீரமான தோற்றம்!

டோரதி:—சூது வாது தெரியாத அவன் முகத்தினழகு வசீகரமானதே.

டோனி:—அம்மா, இந்த நெவில்லியின் மாங்கொட்டைபோன்ற கண்களையும், எட்டுக்கால் பூச்சி நடப்பதுபோல் 'பியானோ' வாத்தியத்தின்மேல் அப்படியும் இப்படியும் பின்னிப்பின்னி முறுக்குகிறாளே அந்த நீண்ட விரல்களையும் கண்டால் எனக்குநிரம்ப ஆசை, அம்மா.

டோரதி:—மாத்திலிருக்கும் பறவைகளும்மோகித்துத் தன்னிடம்வந்து சேரும்படி செய்யக்கூடியவன் இவன். இதுபோல என்மனம் சந்தோஷமடைந்தது இதுவரையிலில்லை. எல்லாம், பாவம் இறந்தபோன இவன் தகப்பனார் லம்ப்கினின் ஜாடையும் குணங்களும் அப்படியே இவன் கொண்டிருக்கிறான். என் செல்வமே, நெவில்லி, உன் நகைகள் இனி முற்றிலும் உன்னுடையதாகிவிடும். எடுத்துக்கொள். நெவில்லி, என் கண்ணே, அருமையும் இனிமையும் உடையவன்தானே என் பிள்ளை, சொல்? நாளைக்கே உங்களிருவருக்கும் கலியாணத்தை நடத்திவிடவேண்டும். குறையாயிருக்கும் இவன் படிப்பை, நாம் கடன்காரர்களுக்குச் சொல்லியனுப்புவதுபோல், இன்னொரு சமயம் பார்த்துக்கொள்ளலாம்.

[டிக்கரி என்னும் வேலைக்காரன் வருகிறான்]

டிக்கரி:—எசமான் எங்கே? சாமி, உங்களுக்கு ஒரு கடிதம் கொண்டுவந்திருக்கிறேன்.

டோனி:—என் அம்மாளிடத்தில் கொடு. அவள்தான் என் கடிதத்தையெல்லாம் முதலில் படிப்பது வழக்கம்.

டிக்கரி:—உங்கள் கையிலேயே கொடுக்கும்படி எனக்கு உத்திரவு.

டோனி:—யாரிடத்திலிருந்து வந்திருக்கிறது அது?

டிக்கரி:—கடிதத்தையே கேட்டுத்தெரிந்துகொள்ள வேண்டும் அதை, சாமி.

டோனி:—அப்படித் தெரிந்துகொள்ள முடியுமானால்— நான் உன்னை யேன் கேட்கிறேன்.

[கடிதத்தை வாங்கிக்கொண்டு நான்கு பக்கமுந் திருப்பித் திருப்பிப் பார்க்கிறான்]

நேவில்லி:—(ஒரு புறமாய்) ஐயோ என்ன செய்வேன்! கெட்டதே குடி! குடி கெட்டதே! ஹேஸ்டிங்ஸின் கடிதமல்லவோ இது! அவர் கையெழுத்து எனக்குத் தெரியுமே. என் அத்தை இதைப் பார்த்துவிட்டால், அப்புறம் எல்லாம் படுநாசந்தான். அவளுக்கு ஏதாவது பராக்குக்காட்டிவைக்கமுடியுமோ பார்ப்போம் (டோரதியைப் பார்த்து) இந்தமார்லோவிற்கு நம் டோனி சாமர்த்தியமாகப் பதிற்சொன்ன ஒரு வார்த்தையை நானுங்களிடம் இன்னும் சொல்லவில்லையே. சிரித்துச் சிரித்து எங்களுக்கு வயிறறுந்துபோய்விட்டது. அதை உங்களுக்குக் கட்டாயம் சொல்லவேண்டும். இப்படி இப்படி, கொஞ்சம் தனியே வாருங்கள் சொல்கிறேன். இவர் காதில் படப்படாது.

(இருவரும் தனியாகப் பேசிக்கொண்டிருக்கின்றனர்)

டோனி:—(கடிதத்தைப் பார்த்துக்கொண்டோ) என் ஜன்மத்தில் நான் இதைப்போலக் கோணலுங் கிருக்கலும் பார்த்ததேஇல்லை. அந்த அச்செழுத்தாக இருந்தால் நான் மிகவும் நன்றாகப் படித்துவிடுவேன், சந்தேகமில்லை. சீசி! இந்த மூக்குங் கொம்புங் காலும், தலைவால் தெரியவில்லையே. 'டோனி லம்ப்கின் அவர்களுக்கு'—எனக்கு வருங் கடிதங்களின் மேல்விலாசத்தைப் பார்த்து என் பெயரைப் படித்துவிடுவது அவ்வளவு சிரமமில்லாதிருக்க, உள்ளே திறந்தாலோ எல்லாம் 'ஞொய்' என்று ஏன்தான் இருக்கின்றதோ— விபரீதம். கஷ்டம் கஷ்டம்! உன்னே படிக்க முடியாதது நிரம்ப கஷ்டம்—ஒரு கடிதத்தின் ஸாரம் எப்பொழுதும் அதன் உட்புறத்தில் தானே இருக்கும்.

டோரதி:—ஹ! ஹ! ஹா! பேஷ், பேஷ்! இப்படியோ என் பிள்ளை அந்தப் படிப்பாளியை வாயடக்கிவிட்டான்!

நேவில்லி:-ஆமாம்! இன்னும் மேலே நடந்ததையும் நீங்கள் கட்டாயம்கேட்கவேண்டும் அத்தை. இன்னுங் கொஞ்சம் இப்படித் தள்ளிவாருங்கள். நாம் பேசுவது இவர் காதில் பட்டுவிடப்படாது. அந்தமார்லோவை இவர் மறுபடி கலங்கவைத்தவிதத்தைச் சொல்கிறேன், கேளுங்கள்.

டோரதி:—இப்பொழுது இவனே மிகவும் கலங்கியிருப்பதாகத் தெரிகின்றது.

டோனி:—(கடிதத்தைப் பார்த்துக்கொண்டே. மேலுங்கீழும் விழுந்து புரள்கின்றது, இந்த நாசமாய்ப்போன கையெழுத்து. இந்த எழுத்துக்களே நன்றாகச் சாராயத்தைக் குடித்துவிட்டுத் தம்மை எழுதிக் கொண்டன என்று எண்ணுகிறேன். (படிக்க முயல்பவனாய்) "அன்புடைய ஐயா" - ஆமாம், அதுதான் அது. அப்புறம் ஒரு ம் இருக்கிறது, ஒரு டி ஒரு ஸ் அதற்கப்புறம் இருப்பது ளேள வோ, ழேள வோ, இழவு இழவு, நாசமாய்ப்போனேன் நான், என்னாற் சொல்லமுடியவில்லை.

டோரதி:—என்ன அது என் கண்ணே, நான் கொஞ்சம் வரலாமா உன் உதவிக்கு?

நேவில்லி:—வேண்டாம் அத்தை, நான் படிக்கின்றேன். கோணற் கையெழுத்தைப் படிக்கக்கூடியவர்கள் என்னைப்போல் யாருமில்லை. (டோனியின் கையிலிருந்து கடிதத்தைப் பறித்துக்கொண்டு) இது யாரிடத்திலிருந்து வந்திருக்கின்றது தெரியுமோ?

டோனி:-தெரியாது. ஒருவேளை, சண்டைச் சேவல் பழக்குகின்ற டிக் ஜின்ஜர் இடத்திலிருந்து வந்திருக்கலாம்.

நேவில்லி :—ஆமாம், அவனிடத்திருலிந்துதான். (படிப்பவள்போல் பாவனை செய்பவளாய்) - "அன்புடைய ஐயா, நான் இப்பொழுது இங்கேஇருப்பது போல நீங்களும் சுகம் என்று நம்புகின்றேன். குள்ளன்கட்சிக் கோழி பெரியகட்சிக் கோழியைக் கொத்திக்கொத்தி இறகெல்லாம் பஞ்சாய்ப் பண்ணிவிட்டது. பந்தயமோ......அப்பா, அதிகம்,...உம்... அப்புறம்...உம்...ரொம்பநேரம் சண்டை...உம் -" இந்தா இந்தா, இதுமுழுவதும் கோழியும் சண்டையுமாகவேஇருக்கிறது. முக்கியமானது ஒன்றுமில்லை; இந்தா, கடிதத்தைப்பையில்போட்டுவைத்துக்கொள், பையில் போட்டு வைத்துக்கொள்.

(கடிதத்தைக் கசக்கி டோனியின்மேல் எறிகிறாள்)

டோனி:—ஓகோ கொ! முக்கியமில்லையாமே! ஏ, என் இராசாத்தியே, சொல்கிறேன் கேள். இந்தவுலகத்தில் இதைவிடஎனக்குமுக்கியமானது வேறொன்றுமில்லை. உயிர் போனாலும் அந்தக் கடிதத்தில் எழுதியிருக்கின்ற மற்ற சமாசாரங்களையுந் தெரிந்து கொள்ளாமல் விடுவேனா! இந்தா, உன்னால் படிக்க முடிகிறதா பார் அம்மா,—ஒன்றும் முக்கியமில்லையாமே இது எனக்கு!

(டோரதியின் கையில் கடிதத்தைக் கொடுக்கிறான்)

டோரதி:—இது வென்ன இது! (படிக்கிறாள்)

"அன்புடைய ஐயா, இப்பொழுது நான் நெவில்லியை எதிர்பார்த்துத் தோட்டத்தின் கோடியில் காத்திருக்கிறேன். ஆனால், என்னுடைய குதிரைகள் மிகவும் களைத்திருக்கின்றன. ஆகையால், நீர் வாக்களித்தபடி எங்களுக்குக் குதிரைகள் கொடுத்துதவுவீர் என்று நம்புகிறேன். சீக்கிரம் புறப்பட வேண்டும். இல்லாவிட்டால், அந்தக்கிழம்"- ஆமாமையா ஆமாம், கிழந்தான் நான்-"உன் தாயார் சந்தேகங்கொண்டுவிடும்; உன் அன்புள்ள ஹேஸ்டிங்ஸ்"

ஐயோ, என்னால் பொறுக்கமுடியவில்லையே! தலை சுற்றுகிறதே! கோபம் வந்து என் தொண்டையை அடைக்கின்றதே!

நேவில்லி:—இருந்தாலும், இன்னொருவர் செய்த வஞ்சனையால் விளைகின்ற இந்தக் கோபத்தை, அத்தை, என் மேல் செலுத்தமாட்டீர்கள் என்று எண்ணுகிறேன்.

டோரதி:—(நெவில்லிக்குத் தலைவணங்கி) நிரம்ப அழகாகப் பேசுகின்றீர் அம்மா; சீ! என்ன மரியாதை, என்ன வசியம்! அம்யா. விவகாரமும் மரியாதையும் கலந்து பேசுவதில் கைவந்தவர் நீங்கள். (குரலை மாற்றிக்கொண்டு) ஏடா, ஏ, குரூபிக் குரங்கே, வாயை அடைத்துக்கொண்டிருப்பதற்குக் கூட அறிவில்லாத கழுதையே, நீ கூடவோ எனக்கு விரோதமாகச் சேர்ந்துவிட்டாய்? உங்கள் சூழ்ச்சியை யெல்லாம் ஒருநிமிஷத்தில் இதோ பறக்க அடிக்கிறேன் பார். (நெவில்லியைப் பார்த்து) அம்மா, குதிரைகள் இரண்டு காத்துக்கொண்டிருக்கின்றபடியால், அவைகளை வீணாக்குவது மிகவும் கொடுமையாம். ஆகையால், உன் காதல்கட்டழகனோடு ஓடிப்போவதற்குப் பதிலாக, தயைசெய்து என்னுடனே ஓடிப்போக இந்த நிமிஷமே ஆயத்தஞ்செய்துகொள். உன்னுடைய இன்னொரு அத்தைதான் உன்னைப் பத்திரமாய் வைத்துக்கொள்ள உனக்கு வேண்டும். ஐயா, தாங்களும் குதிரையில் ஏறிக்கொண்டு எங்களுக்கு வழித்துணையாக வரவேண்டும். நீங்கள் உங்களைக் குட்டிச்சுவராக்கிக் கொள்ளப் பார்த்தாலும், நான் உருப்படுத்தி வைக்கக் கூடும் என்பதை இதோபார் காட்டுகிறேன்—யாரடா அங்கே வேலைக்காரன். (போகிறாள்)

மதுரைக் கோவை

[429-வது பக்கத் தொடர்ச்சி]

பரத்தையிற் பிரிவு

இன்னுந் தோலையச் சூளெடுத்தற்கட் டலைவிகூறல்

நொதுமலர் வாழ்வுக்கு நோற்பார் கலவிக்கு
நோற்றுநிற்கு
மதுமற வாயிங் கெழுமையு நீகொன்றை
யாடகப்பூ
மதுமலர் மார்பர் மதுரா புரியந்த
வல்லிநல்லார்
புதுமண வாளவுன் பொய்ச்சூளி லென்னெஞ்சு
புண்பட்டதே. 345.

தலைவி பரத்தையை யானையாகச் சேடித்தல்

அடுக்குந் தலைவற் கபாயமெண் ணுநிற்கு
மன்புசென்று
தொடுக்கும் பொருளுக் கலம்பிற வாது
கொழித்தளந்து
தொடுக்குந் தமிழறி வார்சொக்கர் கூடற்
றொடுத்ததொடர்
விடுக்கும் பொழுதடங் காதண்ணல் மேல்கொண்ட
வேழமன்றே.

82
m211, N28kN
N34.7.28
199178

தலைவி தலைவனோடு புலந்து கூறல்

வீதித் தலையில் வியனூடு வாரிட்ட
வெம்பரிக்குப்
போதித்த தேசிகர் நாமல்ல வோவெறும்
பொய்யடங்க
வோதித் தமிய னுலைமெழு காகு
முபாயமண்ணல்
சாதித் ததுநன்று நின்றின்ன மேதுகொல்
சாதிப்பதே. 347.

தலைவி புலவி தீர்தல்

பொய்யைக் கலவியந் தேன்மாலை யாகப்
புனைந்துவஞ்சஞ்
செய்யச் சமைந்தொரு செம்மனின் றுல்வெண்
டிரையலம்பும்
வையைத் தலைவர் மதுரா புரியிலம்
மாயமெய்யா
நையப் படைத்தன னேயென்செய் தானந்த
நான்முகனே. 348.

பாலனைப் பழித்தல்

வலத்தியல் சூல மதுரேசர் கோயில்
வலஞ்செயப்போய்ச்
சலத்தியல் செய்து வருங்களி றேவிலை
சாற்றிவிற்கு
நலத்தியல் சேரிக்கு நல்விருந் தாவது
நாளுமுங்கள்
குலத்தியல் பாயிருந் தாலுன்னை யோநொந்து
கூறுவதே.* 349.

புதல்வனை முனிதல்

கனக்குன்ற வில்லி கடம்பா டவிநின்று
கண்பிசைந்து
சினக்குந் தொறுமழுந் தெள்ளமு தேசிந்தை
சென்றுருகிற்
றனக்கென் றவான்பை யாசைகொண் டாடுமுன்
றந்தைக்கல்லா
லுனக்குங் களிதந்த தோவெங்கை மார்கொங்கை
யூற்றின்பமே. 350.

புதல்வனை வினுதல்

மின்பூட்டு செஞ்சடை வெள்ளிமன் றுளர்
வியன்கிரியிற்
பொன்பூட்டி யுன்றந்தை மார்பையுந் தோளையும்
புல்லிப்புல்லி
யின்பூட்டி விட்டதும் போதாம லுன்னையு
மாதரித்தங்
கென்பூட்டி விட்டன ரோவன்னை மாரென்
னிளங்களிறே. 351.

புதல்வனை வற்புறுத்தல்.

கொங்கோல வண்டிமிர் தார்ச்சொக்க நாயகர்
கூடலுங்கள்
செங்கோல் முறைமை முழுதுங்கொள் வாய்பொற்
சிறுசதங்கை
பொங்கோடை வாரண மேயுந்தை போலவெம்
போலொருவர்
தங்கோல முந்தனி யுங்கண்டு போகை
தவிர்ந்தருளே. 352.

* இச்செய்யுள் இலக்கண விளக்கவுரையிற் (பக். 500) காட்டப்பெற்றது.

செவ்வணி விடுத்தந்துத் தலைவி யிரங்கல்

வாருங் குவடு பொருமுலைப் பாகர்
மதுரைநல்லார்
சேரும் பொதுமனை வாசலெல் லாமொரு
செவ்வணிபூண்
டூருந் தெருவுஞ் சிறுநகை யாடி
யொருத்திசென்று
தாருந் தலைவரை யென்கில்நன் றேநந்
தலையெழுத்தே. 353.

செவ்வணி யியற் பணித்தல்

வடிபூத்த வேற்கணல் லீர்மட னானை
வனப்பழிக்கும்
படிபூத்த விற்பிறப் பேதுசொல் வேன்தொண்டர்
பண்டைமுத்தி
யடிபூத் தருளும் பிரானுலை வாயி
லரும்புமுல்லைக்
கொடிபூத்த தென்றொரு கொம்புசெம் போது
கொடுவந்ததே. 354.

பாணன் வரவு கண்டு தோழியுரைத்தல்

கனிப்பாட லின்னிசைப் பாணனங் காதனற்
கணவண்பாற்
றனிப்பாயல் தந்த தறிந்தில னேபொற்
றடங்கிரிவிற்
குனிப்பா ரசிருக் குங்கூடல் மாநகர்க்
கொம்பனையாய்
தொனிப்பாடல் கொண்டு துயிலெடை பாடத்
தொடங்கினனே. 355.

பாணன் முனிதல்

மகிழ்வாச மாலைப் புனலூ ரனுக்குங்கள்
வாசலின்றிப்
புகுவாச லில்லை யெனும்புலைப் பாண
பொறியறுகாற்
றொருவா சிகைசொக்கர் பேரிசை யாளினைச்
சூளுறநீ
தருவா யலையிது காணுங்கள் வாழ்வுந்
தலைமையுமே. 356.

பாண னிரந்து கூறல்

நடைக்கரும் பென்று பலர்கூற வண்பொரு
ணுடிநிற்குங்
கடைக்கரும் புஞ்செம்மல் காமிக்கு மோவண்டு
கால்வருடக்
தொடைக்கரும் புங்கொன்றை யார்சொக்கர்கூடத்
துவளுநுண்ணு
லிடைக்கரும் பேயடி யேனிசைப் பாணனிக்
கென்செய்வதே. 357.

தலைவி யிற்பரத்தையைப் பழித்தல்

வண்டார் கழனி மதுரேசர் மாட
மறுகிலெங்கைத்
தண்டாத வீறென தாமறி யேன்தழு
வித்தழுவிக்
கொண்டாடு மின்பத் தரம்போ யலைந்தது
கொங்கையெங்கை
யுண்டா மினியிவற் கும்பெற லாமென்
றுலகையுமே. 358.

இற்பரத்தை தலைவியை யிகழுதல்

கற்புக் கரசிவ ளானுலு மின்பக்
கலைதெரியும்
பொற்புக்கெனக்கெவர் போதுங்கொல் லோபொருப்
போடிகலி
மற்புக் கணிபுயத் தார்சொக்க நாதர்
மதுரைநன்னுட்
டிற்புக் கிருந்தவ ளோபழிப் பாளென்
னெழினலமே. 359.

சேரிப் பரத்தையர் புனலாடுமிடத்துக் கூறல்

அளகந் திருத்தி யிளகார வண்ட
லணிந்துகொங்கைப்
புளகம் படுத்திப் பயனென்கொ லோமெய்ப்
புலத்தமிழ்நூல்
குளகம் பயப்புனை வார்சொக்கர் கூடற்
கொடியிடைவர்
துளகம் படுத்துவ ளாகில்வண் டார்புன
லூரனையே. 360.

இற்பரத்தை மேம்பாடு கூறல்

தூணுங் கழையுஞ் சுளியானை யாலையச்
சொக்கர்வென்ற
பாணும் பனிமொழிப் பாவைநல் லார்தம்
பரப்படங்கப்
பூணுங் கலவிப் புனலூர னென்னைப்
புனல்விழியிற்
காணுந் தனையுமன் றோவெங்கை மார்தங்கள்
காதலனே. 361.

புனலாடிவந்த தலைவனோடு தலைவி யூடியுரைத்தல்

நாணத் தலையன்றி நீபுன லாட
நயந்தநலம்
பூணத் தவம்புரி வாரெங்கை மார்புனல்
பூத்தசெங்கட்
கோணச் சரவணி யார்கூட ணுடவிக்
கோலமுன்னைக்
காணத் தவஞ்செய்த வாதமி யேனிரு
கண்களுமே. 362.

தலைவி தலைவனோடு புலத்தல்

கோணும் பிறையர் திருவால வாய்நம்பர்
கூடலெங்கை
நாணும் பெருமையும் நன்றுநன் றேயொரு
நாளெனினும்
பேணுங் கொழுநரெம் மோடின்ப வாரி
பெருகியொன்றாய்ப்
பூணுங் கலவி யிடைமதி யாது
புகுந்தனனே. 363.

புலவி நுணுக்கம்

கன்னுக மாகக் கருணைசெய் வார்பொற்
கடம்பவன
மன்னு ரருளுக் கழியுநெஞ் சேகள
பாசலமென்
பொன்னுகம் பூணத் தழுவுமப் போதும்
புலப்பறொன்றால்
என்னுரு மென்றறி யேனிவ ராசையு
மின்பமுமே. 364.

கலவி நலமுவத்தல்

நிலவித் திகழ்பிறை யுங்கங்கை மாதும்
நிலைதளரக்
குலவிக் குலவி விறகுவிற் பார்தமிழ்க்
கூடலன்னுர்
புலவிக் கெனவு மளவு படாத
புதுமைதருங்
கலவிக் களவுநெஞ் சேயெங்ங னேகரை
காண்பதுவே. 365.

பரத்தையர் பிரிவு முற்றும்

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[421-வது பக்கத் தொடர்ச்சி]

மயங்கா மரபுடைத் துன்பியல் தோற்றம்.

வந்தனேன் என்றனன் தாரை தடுத்தாள். தடுத்தாலென்! தன் மேம்பாட்டினைப்பெருக்கியுரைத்து அந் நன்மனையாட்டியின் அன்புமொழிகளை வீணுக்க நினைத்தனன் வாலி. அதன்மேல், வலிய துணையின்றிச் சுக்கிரீவன் மீண்டும் பகைமேற்கொண்டுதோன்றியிருக்கமாட்டான் என ஊகமாய்ச் சொன்னதைப் பின்னர் உண்மையேயென்று உணர்த்துதற் கெண்ணினுள்—

அன்னது கேட்டவ ளரச வாயவற்
கின்னுயிர் நட்பமைந் திராம னென்பவ
னுன்னுயிர் கோடலுக் குடன்வந் தானெனத்
துன்னிய வன்பினர் சொல்லினு ரென்றுள்

[தாரையானவள், வாலி சொன்னவைகளைக் கேட்டு, "அரசே, அந்தச் சுக்கிரீவனோடு இனிய உயிர்நண்பனுய்ப் பொருந்தி இராமன் என்பவன் உன்உயிரைக்கவர்வதற்கு அவனுடன் வந்திருக்கின்றுனென்று, நம்மிடத்து நெருங்கிய அன்புடையவர்கள் சொன்னுர்கள்" என்று கூறினுள்]

பாவம், தாரை இதனைத் தயங்கித் தயங்கிக் கூறியிருத்தல்வேண்டும். அங்கதன் ஒற்றர்கள் மூலமாக இதனை அறிந்து தனக்குக் கூறினுனென்று முதனூலில் சொல்லியபடி இங்கு இவள் அச்செய்தி தனக்குக் கிடைத்த வழியை உரையாமல் விட்டது தக்கதே. அறமும் புகாத இலங்கையிலன்றி வேறெங்கும் கம்பர் ஒற்றர்களை நடமாடவிடமாட்டாராதலினுல், கோசலம்போல்கிட்கிந்தையிலும் ஒற்றுடற்கு இடமமைக்காமல் தவிர்த்தனர் என்று எண்ணல்வேண்டும். பின், தாரைக்கு இது எவ்வண்ணம் தெரியவந்தது என்றகேள்வியை எழுப்பிக்கொள்வதனினும், வாலி அன்னதற்கு எதிருரைத்த மேன்மையைக் கருத்துட்கொள்ள விரைதல் நலம். தாரையின் சொற்களைக் கேட்ட வாலியின்நெஞ்சம் துண்ணெனத் துடித்தது. இவள் கூறிய இது உண்மையாயிருத்தல் கூடுமோ அன்றோவென ஆராயப் புக்கானலன். அவள் வார்த்தைக்கே பதறுகின்றனன்; பதறி,

உழைத்தவல் லிருவினைக் கூறு காண்கலா
தழைத்தய ருலகினுக் கறத்தி னாறெலா

பிழைத்தவற் கியல்பல வியம்பி யென்செய்தாய்
பிழைத்தனை பாவியுன் பெண்மை யாலென்றான்

[அவரவர் தாம் செய்து சேர்த்துக்கொண்டவலிய இருவினைகளுக்கு அழிவு காணமாட்டாமல், என்செய்வோம் என்செய்வோம் என்று கூவிக்கூவி அயர்கின்றஉலகத்திற்குத் தர்மமார்க்கங்களை எல்லாம் செய்து காட்டுபவனான அவனுக்கு அடுக்காத வார்த்தைகளைச் சொல்லி என்ன அபசாரப்பட்டாய், ஏபாவி, நீ ஒரு பெண்ணாயிருப்பதால் பிழைத்தாய் - என்றான்]

இராமபக்திக்கு ஓர் எல்லை இங்கு இவ் வாலியின்பாற் காணலாம். உழைத்த வல் இருவினை ஒழிவதற்குரிய அறத்தினையெலாம் இழைத்தவன் இவன், என்னும் இத்தனையும் ஈசுவரன் ஒருவனுக்கே பொருந்துமாயினும், வாலி இங்கு இராமனது பரத்துவத்தைத் தெரிந்துகொண்டே பேசுகின்றான் என்று எண்ணலாகாது. இதுவும், இதுபோன்று பின்னைய பாசுரங்களில், "தருமமே தவிர்க்குமோ தன்னைத்தான்" என்றும், "அம்பிடைதொடுக்குமோ அருளின் ஆழியான்" என்றும் வருவனவும், பரமனென்றே இராமனைப் பகர்வனபோல் ஒலிக்கின்றனவேனும், இவ்வயின் வாலியோ அப்பரத்துவத்தைத் தெரிந்து செப்பினவனல்லன். மனிதரில் இவனையொப்பார் உத்தமர் பிறரில்லையாதலின், பரமனென்றே இராமனைப் பாவிக்க வேண்டும் என்பதே வாலியின் கருத்து. உரைக்கப்பெறுவதுஉண்மையேயாயிருப்பினும், அது உண்மையென்று ஓராமல் உரைக்க நேர்தலும் உண்டு. தான் எண்ணுவகையில் இது உண்மையே யாவதைப் பின்னரே உணர்கின்றான் வாலி.

இறைவனுக்கு இயல்பல நினைப்பவர் பாவியர்; ஆதலின் பாவம் இத்தாரை இங்குப் பாவியென்றுஅழைக்கப்படுகின்றாள். இன்னது சொல்லிய ஒருத்தி தன் பெண்மையால் பிழைத்தாள் என்னும் வாலி இரட்டுறமொழிகின்றானென்பதில் ஐயமில்லை. "நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும் பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே" என்னுமவ் வபவாதத்திற் கிணங்க, "நீ பெண்ணாயிருத்தலின் இராமனுக்கு இயல்பல இயம்பி இந்தப் பெரும்பிழை செய்தாய்" என்று அவள் பிழைக்கு அமைதிகாட்டுவான்போல் இகழ்ந்ததோடு, "இப்பிழை செய்தவுன்னை நான் இங்ஙனே கொன்றுவீழ்த்தாமல்விட்டேனெனின்,பெண் கொலை செய்யலாகாதென்பதைக் கருதியே யன்றி, மனைவியென்னும் அன்பினாலன்றென்பதை, ஏபாவி, நீ அறிந்துகொள்; ஆதலின் உன் பெண்மையே இப்பொழுது உன் உயிரைக் காப்பாற்றியது" என்றபொருளும் அவ்வாசகத்தினுள் அடங்கி இருக்கின்றது. பெண்மையால் பிழைத்தாளென்று ஒருமாது நினைவுறுத்தப்பெற்றது இந்நூலின்கண் முதன்முறை இதுவன்று. முன் மாயவேடம்பூண்டு சீதாபிராட்டியைவஞ்சிப்பான் வனத்துவந்துதனதாற்றலைப் பலபடி பேசிய இராவணனைநோக்கிச் சீதை, "இலங்கை நிருதரெல்லாம்நாளையே இராமனால்அழியுமாறுகாண்டிர்" என உரைத்தலும், அம்மாற்றத்தில் சீற்றம்வைத்த இராவணனது மாயவேடம் தானே விட்டேக, அவன் சீதையைச் சினந்து நோக்கி,

விண்ணவ ரேவல் செய்ய
வென்றவென் வீரம் பாராய்
மண்ணிடைப் புழுவின் வாழு
மானிடர் வலிய ரென்றாய்
பெண்ணெனப் பிழைத்தா யன்றேல்
நின்னையான் பிசைந்து தின்ன
வெண்ணுவெ னெண்ணிற் பின்னை
யென்னுயி ரிழப்பெ னென்றான்

[எனக்குக் குற்றேவல்செய்யும்படி தேவர்களைவென்று அடக்கிய என்வீரத்தைக்கருதாமல், மண்ணில் புழுவைப் போல் மனிதர் என்னை வெல்லக்கூடிய வலிமையுடையவர் என்று கூறினாய். நீ பெண்பாலாதலால் பிழைத்தாய். அல்லாமற்போனால் நான் உன்னைப் பிசைந்து தின்ன எண்ணுவேன்; அவ்வாறு எண்ணினேனாயின் பிறகு என் உயிரை இழப்பேன்—என்றான்.]

'இராமன் நின்னைக் கொல்வான்' என்று இங்கு வாலியும் அங்கு இராவணனும் ஒரு பெண்ணினால் கூறப்பெற்றனர். "இராமனுக்கு இயல்பல சொல்லிய நீ உன் பெண்மையால் பிழைத்தாய்" என்று தாரைக்கு எதிர்விளம்பினான் வாலி; இராவணன், "எனக்கு இயல்பலசொல்லியபின்னரும்நீபெண்ணெனப்பிழைத்தாய்" என்னச் சீதையைச் சினந்தனன். எனினும், அவளைப்பிசைந்துதின்னும்நினைவும் எழுவதன்இயற்கைஇராவணன்மனதில்கலந்திருப்பதுதெரிகின்றமையால் அரக்கனுக்குஅடுக்காததோல்வியைக்கூறியபிழையிலும், அது கூறியும் பிழைத்த அவள் உயிரே அவளது பெண்மைக்குக் கடமைப்பட்டிருக்கின்றதென்பதில் ஐயமில்லை. இவ்வாறு, 'உயிர் பிழைத்தாய்', 'தவறு செய்தாய்' என்னுமவ் விரண்டு பொருள்களுடைய 'பிழைத்தனை' என்பது அவ்விருவர் வாயிலும் இவ் விரண்டுபொருள்களையும் ஒருங்கே யேற்றுக்கொள்கின்றதாயினும், இராவணன் வாயில் முன்னையபொருள் சிறப்பதுபோன்றே, வாலியின் வாயினில் பின்னையது சிறக்கின்றது. இவள் சொல்லியது தவறாகுந் தன்மையையே இனிப் பேசுகின்றான்—

இருமையு நோக்குறு மியல்பி னாற்கிது
பெருமையோவிங்கிதிற்பெறுவதென்கொலோ
வருமையி னின்றுயி ரளிக்கு மாறுடைத்
தருமமே தவிர்க்குமோ தன்னைத் தானரோ

[இம்மையிற் புகழும் மறுமையிற் புண்ணியமும் எதிர்பார்க்கும் இராமனுக்கு இதனால் பெருமையுண்டாகுமோ! இதனால் அவன் அடையும் இலாபந்தான் யாதோ! அருமையாய் நின்று உயிர்களைக் காக்கின்ற நெறியையுடைய தருமமானது தன்னைவிட்டுத் தானே விலகிவிடுமோ]

என்றுகூறியவன்,தருமந்தன்னைத்தான்எஞ்ஞான்றுந் தவிர்க்காதென்ற இந்நம்பிக்கையாற்றான் உயிர்துறக்க நேர்ந்தானாதலின் 'உய்ந்தனன்'—ஏனெனில் இந்தஇராமபாணந்தான் அந்தத் தருமத்தின் நெறியென்பது பின்னர் இவனுக்குத் தெரியலாயிற்று. இராமனது இயல்பு இன்னது; மற்று, அவனது சரிதமும் இவ்வியல்பிற்கு ஒத்திருக்கின்றது என்பதையும்,

ஏற்றபே ருலகெலா மெய்தி யீன்றவண்
மாற்றவ ளேவமற் றவடன் மைந்தனுக்
காற்றரு முவகையா லளித்த வையனைப்
போற்றலை யின்னன ல்கறற் பாலையோ

[தனக்குத் தகுதியான பெரிய உலகம் முழுவதையும் தந்தைகொடுக்கத் தான் அடைந்து பிறகு,தன்னைப்பெற்ற கோசலையின் மாற்றவள் ஆகிய கைகேயியின் கட்டளைப்படி அவள்மைந்தன் பரதனுக்கு அளவற்றமகிழ்ச்சியோடு கொடுத்துவிட்ட பெருமகனைப் போற்றிப் பாராட்டாமல், இவைகளைச் சொல்லத் தகுவாயோ]

என எடுத்துக்காட்டி, "அம் மேன்மகன் என்னைக் கொல்லத்தான் நினைத்தானாலும், அதற்கு வேறோர்

துணையும் வேண்டுமோ; துணைதான் வேண்டுமெனினும்ஓர்குரங்கையோ துணையெனக் கொள்வான்" என நகுவான்போல்,

நின்றபே ருலகெலா நெருக்கி நேரினும்
வென்றிவெஞ் சிலையலாற் பிறிது வேண்டுமோ
தன்றுணை யொருவருந் தன்னில் வேறிலான்
புன்றொழிற் குரங்கொடு புணரு நட்பனோ

[நிலைபெற்ற உலகங்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து நெருங்கிவந்து எதிர்த்தாலும், வெற்றிபொருந்திய கொடிய வில்லைத் தவிர அவனுக்கு வேறொரு துணைவேண்டுமோ! தனக்கு நிகர் தன்னைத் தவிர வேறெவருமில்லாத அப்பெருமகன், அற்பத் தொழிலுடைய ஒரு குரங்குடன் சிநேகஞ் செய்வானோ]

என்று கேட்கின்றான்.கோசலத் தொருகோமகன்சென்றோர் குரங்கினுடன் உறவுபூணுவானென்பது வாலிக்கு உயரிய விந்தையா யிருக்கின்றது. முன்னே ஓர் வேடனையும், இப்பொழுது ஒரு குரங்கையும், இனி அரக்கன் ஒருவனையும் அவன் இதயமுறத் தழுவியேற்றற்கு இணங்கி நின்றதை இவ்வாலி அறியான். ஆதலின் அவ்வாறு கூறினன். கூறி,

தம்பிய ரல்லது தனக்கு வேறுயி
ரிம்பரி னிலதென வெண்ணி யேய்ந்தவ
னெம்பியும் யானுமுற் றெதிர்ந்த போரிடை
யம்பிடை தொடுக்குமோ வருளி னாழியான்

[இவ்வுலகில், தம்பிமார்கள் அல்லாமல் தனக்கு வேறு உயிர் இல்லை என்று எண்ணி அவர்களுடன் இணங்கிவாழ்பவன், என்தம்பியும் நானும் எதிர்த்துச் செய்யும் போரினிடையே ஒருஅம்பைத்தொடுப்பானோ கருணைக்கடலே அனைய அவன்]

என்னக் கேட்கின்றான். வாலியின்மீதோர்அம்பிடை தொடுத்து அவ்விராமன் தனக்கு வேறோர் தம்பி ஈட்டிக்கொள்ள முயல்கின்றானென்பது இவ்வாலிக்குத் தெரியுமாறில்லை. ஆதலால் வாலி இதனைத் தன் மனத்தில் எண்ணவும் ஆற்றலன். எனின், இன்ன காரணங்களால் தாரையின்மொழி பழுதுறப் பேசி இறுதியில்,

இருத்திநீ யிறையிவ ணிமைப்பில் காலையி
லுருத்தவ னுயிர்குடித் துடன்வந் தாரையுங்
கருத்தழித் தெய்துவென் கலங்க லென்றனன்
விரைக்குழல் பின்னுரை விளம்ப வஞ்சினள்

[நீ சிறிதுபொழுது இவ்விடத்தேஇரு. கண்கொட்டித் திறப்பதற்குமுன், கோபித்துவந்த சுக்கிரீவனதுஉயிரைக் குடித்து அவனுடன் வந்தவர்களின் கருத்தினைக் கலக்கிவிட்டுத் திரும்புவேன். நீ கலங்காதே, என்று கூறினான். வாசனை பொருந்திய கூந்தலையுடைய தாரை அதன்பின் யாதும் விளம்ப அஞ்சிச் சும்மாவிருந்துவிட்டாள்.]

அஞ்சி நின்ற தாரையும் அஞ்சாது செல்கின்ற வாலியும் இக்காட்சியில் நம்முடையபரிவிற்கு மிகவும் பாத்திரமாகின்றனர். முன், வெளிவேடநாடகத்தின்படி மான்பிடிக்கச்சொன்ன தன் மனைவியின் வார்த்தையைக்கேட்டுக் கெட்ட இராமன், அதற்குப் பரிகாரந் தேடுவான்போல், மனைவியின் வார்த்தையைக்கேளாத இவ்வாலியைக் கொன்றுகெடுக்க நிற்கின்றான். அன்னவன் மறையம்பிற்குத் தன்னின்னுயிரை இரையாக்கிக்கொள்ள இவ்வொரு வானரவீரன் வாலி இங்ஙனம் விரையுங்கால், "அவ்விராமன் இது செய்யான்" என அவன்தகவுடைத்தருமத்தில் நிலைத்த நம்பிக்கையுடன் வருமிது உன்னுவோர் உள்ளத்தை உருக்குந் தன்மையது."தரும மறிந்தவரும் நன்றியையறிந்தவருமான இராமர் எங்ஙனம் தீமைசெய்வார்" என்று வாலியின் கூற்றாக வான்மீகத்தில் காணப்படும் வாக்கியமே கம்பரால் இங்கு இவ்வகையெலாம் விரித்துரைக்கப்பெற்றது. எனினும் வான்மீகத்தில் இயம்பப்பெற்றுள வேறு இரண்டுவிடயங்களைக் குறிக்கொள்ளாமல்விட்டுவிட்டார் கம்பர். சுக்கிரீவனை அழைத்து இளவரசாக்கும்படி தாரை வாலியைத் தூண்டியது ஒன்று. இதனால், கணவன்பால் அன்பினால் மாத்திரமன்றிச் சுக்கிரீவனுக்குச் செய்யவேண்டிய நீதியிலும் ஆர்வம்நிறைந்த நெஞ்சினளாய் நிற்கின்ற தாரையின் பெருமை அந்நூலின்கண் பின்னும் பலபடி சிறந்து தோன்றுகின்றது.அரசியற்செய்தியில் அரிவையர் கலந்துகொள்வது அழகன்றென் றெண்ணிய இத்தமிழ்த்தாரை அப்பாகத்தை விட்டனள்போலும். மற்று, சுக்கிரீவனைக் கொல்லாமல் அடித்துமாத்திரம் துரத்திவிட்டுத் திரும்புவதாக வாலி வான்மீகத்திலுள் தன் மனைவிக்குக் கொடுத்தவாக்கினுக்கு மாறாக இங்கு, உருத்தவன் உயிரைக் குடித்தேமீள்வதாக வஞ்சினங் கூறிப் புறப்படுகின்றான். வான்மீக முனிவர், வாலியின் இதயத்தில் சுரப்பித்த அச்சிறு இரக்கத்தைக் கம்பர் ஏற்றுக்கொள்ளாதவராகி அதற்கு மாறாக, கொலையின் கொடுமையே உறையும்படி செய்ததன் காரணம் மிகவும் நுட்பமானது. கொல்லக்கருதாமல் வருகின்ற ஒருவனைக் கரந்திருந்து ஒருவன்கொன்றுவிடுகின்ற செய்தியால் விளையும் இரக்கம் சாலப் பெரிது. இதனால், வான்மீகத்தின்படி வாலியின் வதை அளவிறந்த கொடுமையதாய்த் தோன்றும். வாலி சுக்கிரீவனைக் கொல்லும் நினைவும் இலன், இராமன்பால் இணையிலா மதிப்பும் வைத்தவன்; எனின், கரவிடம் விட்டு இராகவன் வெளிவந்து ஒரு சொல் சொல்லியிருப்பானாகின், வாலியின் உயிரும் சுக்கிரீவன் துயரும் ஒருங்கே காக்கப்பெற்றிருக்குமன்றோ என்பதை எண்ணுங்கால், இராமன் செய்கை சாலக் கொடிதென்று கருதநேர்வதுஇயல்பு. இயலுமாயின் அதற்குக் இடந்தருவது நன்று அன்றெனக் கம்பர்நினைத்திருக்கக்கூடும். வாலியின் பண்டைச்சரிதம் எதுவேயாயினும், தன் தம்பியை அவன் செய்கின்ற கொடுமையெல்லாம், அத்தம்பி தனக்குக் கொடுமைசெய்தான் என்றவோர் சீற்றத்தின் வேகத்தின் மிகுதியல்லால் வேறன்று. தான் புகுந்திருந்த பிலத்தின்வாயிலை மலைகொண்டடைத்துவிட்டுத் தன்னுடைய சிம்மாதனத்தில், தான்நம்பியிருந்த ஒருதம்பி வீற்றிருக்கக்காணுமொரு வீரன் இத்துணையும் ஒரு பிழையினால் நிகழ்ந்ததென்றெண்ண மறுத்தானெனின், அதனை இயல்புந்தகவும் கடந்தவோர் கொடுமைஎனக் கடிந்துவிடலரிது. பிறர் தனக்கோர் பிழை எக்காலும் செய்யார் என்றேனும், செய்தாரெனினும்அதுவும் நன்றே என்றேனும் அமையவல்ல உத்தமர்களில் ஒரு உத்தமன் இவ்வாலி அல்லன் என்னும் அளவே அவன் செய்கைகள் காட்டுகின்றனவேயன்றி, அவன் எல்லாப் படியாலும் எவ்வகையிலேனும் கொலையுண்டழிவதற்கே உரியவோர் கயவனாந் தன்மையைத் தோற்றுவிக்கவில்லை. அன்னவன்கொலையுண்பதில் ஒருபுறம் இரக்கந்தோன்றவும்,மறுபுறம் அவனைக்கொன்றவன்பால் வெறுப்புத் தோன்றாமலும் இக்களத்தினை நிகழ்த்துவது கத்தியின் நுனியில் நடப்பதனினும் அருமையானதோர் காரியம். ஆதலின், வாலி தன்மனைவியின் அன்புமொழிக் கிணங்கியேனும் தன் தம்பியின்பால்

சிறிது தயைகாட்டச் சிந்தித்தனன் என்ற செய்தியைக் கம்பர் மறைத்து, "தன் தம்பியின் உயிரையே குடிக்கச்சென்றான் ஒருவன் கொலையுண்டானேல் உண்க" என எண்ணும்வண்ணம் நம்மனோர் மனத்தினை அமைக்க முயல்கின்றனர். இதனுடன், வாலி, தன் வீரத்தின் மேம்பாட்டினைப் பெருமிதம் மிகப் பேசிக்கொள்வதும், அவன்பால் நாம் கொள்ளக்கூடிய பரிவானது அளவிறந்து செல்லாமல் ஒரு சிறிது தணிக்கவல்லது. படுகொலைக்கொருவர் இரையாயினரென்றால், அது, காண்போர் கேட்போருக்குத் துன்பம் மிக விளைக்கும் இயல்புடையவோர் செய்தியாம். அத்தகைய துன்பம் அளவிறந்து கடவாமல் காக்க வேண்டுதல் நாடகக் கவிகளின் கடன். பள்ளியறையில் தன் உயிரினும் இனிய ஒருதலைவனால் வதையுண்டாள் ஒரு பேதை டெஸ்டிமோனா வென்பவள். ஷேக்ஸ்ப்பியர் நாடகத்தில் இக்காட்சியைக் காண்கின்ற மக்கள்கிடக்கக் கல்லும் புல்லுங் கரைந்தழும். பயமும் பரிதாபமும் நிறைந்த இத்தகைய துன்பவியல் நிகழ்ச்சிகளைக் கலையுணர்வு கைவந்த கவிவரர் புனைந்து காட்டும்போது அதனைக் காண்கின்ற மனிதர்தம் இயற்கையில் உள்ள பயமும்பரிதாபமும்தூய்மையடைகின்றன. தன்னைப்பற்றியே ஒருவன்கொள்ளும்வழக்கமாயிருக்கின்றபயமும்பரிதாபமும் மெல்லமெல்ல, தன்னைச் சாராதவைகளிடத்தும்தன்மனோபாவனையால் இரங்குகின்ற ஒருநற்குணமாய் மாறும்படி செய்வது இவ்வுபரிய துன்பியல் நாடகங்களின் தொழில். பண்டைய கிரேக்க ஆசிரியர்களும் பின் ஆங்கில ஷேக்ஸ்ப்பியரும் இவ்வாறு மானுட மனம் தூய்மையடைவதற் குரியவோர் உயரிய கருவியாய்த் துன்பியல் நாடகங்களைச் செவ்விதின் நிகழ்த்தியிருக்கின்றனர். இந்த நன்மை பயக்கவேண்டுமாயின், இந்நிகழ்ச்சியில் அடங்கியிருக்கின்ற துன்பம் பயம் பரிவு முதலியவைகள் அளவுகடந்தோடி அதனைப்பார்ப்பவரும்நினைப்பவரும்அடியுடன்உணர்ச்சியையிழந்துவிடும்படி செய்யத்தக்கவைகளாகஇருத்தலாகாது. ஆதலால், தீதுற்று மாய்கின்றவர்தம் இயற்கையில், நம்முடைய இரக்கத்திற்குப் பாத்திரமாகும்படி உயரிய குணங்கள் இருப்பதோடு, அவ்விரக்கத்தின் மேலீட்டினால் நாம் முற்றிலும் மனமழிந்து பரவசமாகி அதன் பயனைநாம் இழக்காமற்காக்கும்பொருட்டுச்சிறிது ஏதோகுற்றம்போல்தோன்றுகின்றவைகளையும் கலக்காமற்கலந்து காட்டாமற் காட்டுவதே துன்பியல் நாடகங்களின் தனிப்பெருந் திறமை யென்று கருதப்பெறுகின்றது. இதற்கோர் நேரிய உதாரணம் அந்த டெஸ்டிமோனாவின் நாடகத்திலேயே காணலாம். கற்பிலும் பெண்மைக்குரிய பெருமையிலும் கணவன்பால் வைத்த அன்பிலும் வடிவின் அழகிலும் இளமை மென்மையிலும் தன்னேரில்லா மங்கை டெஸ்டிமோனா என்பவள், ஒத்தெல்லோ என்னும் ஒரு மூர்சாதியைச் சேர்ந்த கருமேனிப் போர்வீரன்பால் வைத்தவொரு பெருங் காதலால், தன் வயதுமுதிர்ந்த தந்தைக்குத் தெரியாமல் அவனை வஞ்சித்து மனைவிட்டுக் கரந்துசென்று அவ் வொத்தெல்லோவை மணந்துகொண்டான். இதனை அறிந்த அவள்தந்தை மனமுடைந்துமதிகலங்கிக் கண்டோர் மனங் கதறும்படி கதறுகின்ற காட்சியை ஷேக்ஸ்ப்பியர் இந்நாடகத்தின்முதலில் நமக்குக் காட்டிவைக்கின்றான். பிறகு, இயாகோ என்னு மொருவன், கம்பரின்கூனிக்கே நிகரெனத்தகுந்த ஒரு கொடுமனப்பாதகன், பொய்யும் வஞ்சனையும் புரிந்து, டெஸ்டிமோனாவின் கற்பினை அவ் வொத்தெல்லோ அயிர்க்கும்படி அவன் மனத்தினைத் திரித்துவிடவே, அக்கணவன் அவ்வியம் மேலிட்ட மூர்க்கத்தால், நம்பியிருந்த அந்நன்மனையாளை, தன்வரவை எதிர்பார்த்துப் படுத்திருந்த பாயலிலேயே கழுத்தைப்பிசைந்து கொன்றுவிடுகின்றான். இந்தக்காட்சியைக் காண்கின்றவர் தம் கண்களைப் பிய்த்துக்கொள்வர். அதுவும், பள்ளியறையிற் கொலை நடக்கும் அரவங்கேட்டு அங்கு வந்து "உன்னை யிதுசெய்தது யார்" என்று வினவிய தன் தாதிக்கு, உண்மையை உரைக்காமல் தன்னை வதைத்தவன் எதிர்நிற்கவும் இப் பெருந்தகைவனிதை உயிர்போகுமுன், "யாருமில்லை; நானே தான். விடைகொள்கின்றேன். அன்புடைய என் தலைவனுக்கு என் வணக்கத்தைச் சொல். ஓ, விடைபெற்றுப் போகின்றேன்" என்னுங்கால் அதனைக்கேட்கின்ற இப்பிரகிருதியே துயரால் நிலைதளர்ந்து பிதிர்ந்துபோதலுங்கூடும். இன்னதோர் வகையில் துன்பத்தின் எல்லையை எய்துவித்த ஷேக்ஸ்ப்பியர், உடனே, நம் மனத்தின் உணர்ச்சி மீளமாட்டாமல் முற்றிலும் மாய்ந்திடாவண்ணம், அதனைக் காப்பதற்குச்செய்கின்ற ஒரு சிறு உபாயத்தால் தன் புலமையின் பெருமையை நன்கு காட்டுகின்றார். அச்சமயத்தில் டெஸ்டிமோனாவின் உறவினன் ஒருவன், வெனிஸ் நகரத்திலிருந்து வந்தவன், இவள் வதையுண்டுகிடப்பதைக் கண்டு, "ஏழை டெஸ்டிமோனா, உன் தந்தை இதன் முன் இறந்துபோயது நல்லதேயாயிற்று; இந்த உன் கலியாணமே அவருக்கு எமனாய் நின்று, தாங்கமாட்டாத் துயரே அவர் முதியஉயிரை அறுத்துவிட்டது" என்று கூறவைக்குஞ் சூழ்ச்சியால், டெஸ்டிமோனா ஒத்தல்லோவின்மீது வைத்தகாதலின்மிகுதியால் தன் அருமைத் தந்தையை மனமுடைய வஞ்சித்து வந்த செய்தியை நினைவூட்டி, அவள் கதியைக் கண்டு இரங்குவோர் மனத்தினை ஒருவாறு நிலைக்குக்கொண்டுவந்து இத் துன்பத் தோற்றத்தினின்று எய்தவல்ல தூய்மையைப்பயனுற அடைவதற்குரியதாகும்படி செய்தமைத்தார்ஷேக்ஸ்ப்பியர். கம்பர் இங்குஇவ்வாலியின் திறத்தில் காட்டிய நுட்பமும் இவ்வகைத்தே. வாலியின் கதியைக்கண்டு வருத்தமே நம் மனமடங்கலும் மூடாவண்ணம், "உருத்தவன்உயிர்குடித்து" வருதற்கு அவன் புறப்படுகின்ற வன்மத்தைக் காட்டி, அவன்பால் நாம் கொள்ளவல்ல பரிவினை முன்னரே சிறிது தணித்துவைத்தனர். "என் தம்பியைக் கொல்லாமல் புடைத்துவிட்டு வருகின்றேன்" என்று இவ்வாலி வான்மீகத்தில் புறப்பட்டது இந் நாடக நுட்பத்திற்கு இடந்தரவில்லையாதலின் கம்பர் முதனூலிலிருந்து இங்ஙனம் விலகவேண்டி நேர்ந்தது வியப்பன்று.

கம்பரும் வால்மீகியும்

சில ஐயங்களுக்கு விடை

திருவாளர் P. இராமாநுஜன் அவர்கள் சென்ற ஜூலை 5 உ கலாநிலயம் பக்கம் 408-ல் செய்திருக்கும் ஆட்சேபங்களுக்கு மறுமொழி:—

i. (a) தென்மொழியில் இராமசரிதையை இயற்றிய கம்பருக்கு வால்மீகி எழுதிய விஷயங்களைமாற்றிக்காலத்திற்கேற்றவாறு புதியனபுனைந்துரைக்கும் உரிமை, (எல்லாக்கவிக்கும்உண்டென்பதுபோல், அவருக்கும்) உண்டென்பதுதிண்ணம். ஆயின் "புதியனபுகவைத்து, பழையன கழித்துக் காலவகைக்குத் தக்கவாறு, யான் இராமாயணம் பாடினேன்" என அவர் பாயிரம் கூறியிருப்பாராயின், வால்மீகிக்கும் கம்பருக்கும் இடையே இராமசரிதையின்பேதாபேதங்களைநாம் கவனிக்க வேண்டிய அவசியமே நேராது. "சயடிச்சான் காபி" யென்று பொருள்தருகின்ற சொற்றொடர் பின்வரும் செய்யுளி லிருக்கின்றதா அல்லது, மாறுதலும் சீர்திருத்தமும் சிறிதேனும் செய்ததாகக் காட்டும் சொற்றொடர்கள் அதில் உளவா என்பதும், அறிஞர் இராமநுஜன் அவர்கள் நோக்குவாராக:—

" தேவ பாடையி னிக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளு முந்திய
நாவி னுருரை யின்படி நான்றமிழ்ப்
பாவி னுலிது ணர்த்திய பண்பரோ "

என்று விளம்பினர். வடமொழியில் மூவர் இராமாயணம் செய்தனரென்றும், அவர்களில் இருவரைத் தான்ஏற்காததாகவும், வால்மீகியின் உரையையேதான் ஏற்றதாகவும் அவ்வுரையின்படி கம்பர் தான் உணர்த்தியதாகவும் கூறியதால், அம்மாற்றம் உண்மையல்லவென்றுகாட்ட நேர்ந்தது. "நாவினு ருரையின்படி" என்றதற்குப் பதிலாய் "உரையிற் பல" என்னும் சொற்றொடரிருப்பின், கம்பன் மாற்றிய உரைகளுக்கு யாதொரு சங்கையும் எழாது.

மற்றும் "யாழ்" தமிழ்நாட்டிற்கே சிறந்த இசைக் கருவியாகும். கோசலநாட்டில் (வீணை யிருப்பினும்) யாழ் வாசிக்கப்பட்டதாக வடமொழி நூல்களில் யாதொரு ஆதாரமில்லை. "யாழ்" என்பது தென்னாட்டு இசைக்கருவி (அது வீணை போன்றதேயன்றி வீணையல்ல). இவ்வாறிருக்கக் கோசல மக்களை,

"தெள்விளி சிறியாழ்ப் பாணர் தேம்பிழி நறவமாந்தி
வள்விசி கருவி பம்ப வயின் வயின் வழங்கு பாடல்"

என்று கண்டிருத்தலே, கம்பன் கல்வியின் தோஷமா, அல்லது வேண்டுமென்று தன்னூரின் வழக்கத்தை அங்குப் பொருத்தினரா என்று ஆராய இடந்தரும் திருவாளர் இராமானுஜன் அவர்கள் காட்டிய புறநானூறு முதலிய சங்கநூற்களால் தமிழரசர் ஊனும் மதுவும்கொள்ளல் சிறப்பாயிருக்கக் கம்பர் இராமரைச்சைவ உணவு கொண்டவராக மாற்றியது அனுவசியமன்றோ?

கம்பர் காலத்தில் ஊன் உண்ணாமைக்குக்காரணம், அக்காலத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர், புத்தமும்சமணமும் நமதுநாட்டில்பரவியதும், அவை "ஊனுண்ணாமை"யும் கொல்லாவிரதமும் போதித்து வந்தமையாலுமே. அவ்விரு சமயங்களையும் வேரறக் களைந்த சைவமும் அறவுணவன்றி வேறுஊண்கொள இடந்தரவில்லை. அப்பழக்கமே கம்பர் காலத்திலும் தொடர்ந்தது. வடநாட்டில் அக்காலத்தில் அவ்வாறு யாவரும் ஊனை நிவர்த்தித்ததாகக் கூற இடமில்லை.

(b) வால்மீகி கோசலநாட்டு எல்லையும் விஸ்தீரணமும் கூறுகின்றார். அவ்விவரப்படி அது மத்தியதேசமாகிறது. அதற்குக்கடல் எல்லையாகக்கூறப்படவில்லை. அதன் நான்கு திக்குக்களிலுமுள்ள தேச மன்னவர், தசரதருக்குஉட்பட்டுக் கப்பம்தருபவரென்றும்வால்மீகி மொழியவில்லை. அவர் (வால்மீகி இராமாயணத்தில்) தசரதருக்குச் சமானமான அந்தஸ்து உடையவர்கள் (சனகராசன்போல்)எனவும் அவ்வவர் தனித்தனி தமது நாட்டை ஆண்டுவந்தனர் எனவும் நாம் அறிகின்றோம். ஆதலால் கம்பர் கலமே "கணக்கிலா நிதியம்" கோசலத்திற்குக் கவித்திறமையால் தருகின்றது. ஆயினும் அது வால்மீகி வாய்மைக்குப் பொருந்தாததே.

2. "தமிழ் மக்களின் அன்பும் உதவியும் பெறவேண்டி" இராமர் சைவசமயத்தைத் தழுவினரென்று யான்கூறவில்லை. ஏனெனில் மனதில் ஒன்றும் வாக்கிலொன்றும் செய்கையிலொன்றுமாகிய அத்தன்மை (hypocracy) இராமரிடத்தி லிருந்ததாகச் சொல்லியதொக்கும். இராமர் உண்மையான சிவபக்தரென்று காட்டினேனேயன்றி, காரியம் முடிவதற்காகச் சைவசமயம் கைக்கொண்டாரென்று நான் புறங்கூறவில்லை. யாவருங் கண்டு களிக்கக்கூடிய தன்மையுள்ள இராமருக்கு, சிவபக்தியுமிருந்ததால் தமிழ்மக்களுக்கு அவரிடம் இயற்கையில் எழும் ஆர்வம் பன்மடங்காயிற்றென்னலாம். சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வதைவிட்டு, விஷ்ணுகோயிலொன்றை இராமர் நிலைபெறச் செய்தாலும், அதனால் அவரிடம் தமிழ்மக்கள் வெறுப்புறார். மற்றும் நமதுநாட்டில்நம்மவரால் மும்மூர்த்திகளும் வழிபடப்பட்டன ரென்பதும், மூவர்களுக்கும் கோயில்களிருந்தனவென்பதும்பண்டைத் தமிழ்நூல்களா லுணரலாகும்.

3. "விசுவாமித்திரர் அகத்தியர் ஆகியமுனிவர்களின் மந்திரோபதேசங்களால் இராமர் தாடகையையும் இராவணனையும் முறையே கொன்றனரென்பது," ஏன் யுக்திவாதத்திற்குப் பொருந்தாது? கம்பராமாயணமான சுருதியும் கௌசிகர் வாக்கில்

"தேவரிற் றேசு மிக்க என்பெருஞ் சேமம் தன்னால்
ஏவரு நிருதன்சேனை இராமனே எளிதில்கொல்லும்"

என வெளியிடுதலால், விசுவாமித்திரன் அருளின்றித் தாடகையை எளிதில் கொல்ல இராமனால் முடியாதென்று ஏன் கம்பன் நம்மை எண்ண வைக்கவேண்டும்? கௌசிகர் ஒப்பற்ற வலிமையால் அத்தாடகையை அழித்துவிடலாகாதா? கம்பர் இவ்வினாவை யெழுப்பி விடைதாராவிடினும் வால்மீகி, கௌசிகர் இதற்குச் சொன்ன சமாதானத்தையும் வெளியிட்டிருக்கின்றார். அப்படலத்தை வால்மீகியில் நோக்குவோமாயின் இதற்கு விவரமான விடை காணலாம்.

(b) தென்னாட்டில்க்ஷத்திரியர் தீயோரை அழித்தல் முறையெனக் கொண்டும், அத்தீயோர்தாம் சிவவேடம் தரித்திருப்பாராயின், அவரை அழிப்பதில்லையென்பது பல சைவநூல்கள் கூறும். இராமரும்இராவணனை அழிக்கவேண்டுமென்னும் துவேஷம் பெற்றவரல்லர். இராவணன் சீதையை விடாமற் பற்றியிருந்த பிடிவாதத்திற்கு அவன் அழிவன்றி வேறுவழியில்லை. அவனைக்கொன்றபிறகு, சிவபக்தனான இராவணனைக் கொன்ற பாவம்நீங்க இராமலிங்கப்பிரதிஷ்டை நிறைவேறியதென்பது, இராமர் உலகஇயற்கை நடையை நடத்திக்காட்டிய சைவநீதியேயாம்.

(4) இராமாவதாரத்தில் மானிட இயற்கைக்கு யாதொரு ஆச்சரியமான மாறுதலின்றித் தன்னிகரில்லாத் தலைவனுய் வால்மீகிபால், இ[illegible]

199178

KALANILAYAM REG. NO. M. 2324.

கின்றூர். காட்டுக்கு இராமர் புறப்படும்போது காணப்பட்ட குணதிசயங்களே மீளும்போதும் (வால்மீகி இராமாயணத்தில்) அவரிடம் காணப்பட்டன. இம் மனித இயற்கை சிறந்ததாயும் ஒரு தன்மைத்தாயுமிருந்தது. கம்பர் காட்டும் இராமரின் மனித இயற்கையோ ஒரு சமமாகக் காணப்படவில்லை. ஆதலால், கம்பர் நூலில் இராமர் சிலசமயம் மானுடவியல்பிற்கு மிகவும் மேம்பட்ட செயல்களும், சிலசமயம் தாமத குணத் தன்மையான மறப்பும் பெறுகின்றூர். இன்னபடி மாற்றுதல் முதனூலுக்குப் பொருந்தாமையாலும், அனாவசியமாதலாலும் கம்பருக்கு அதுசிறப்புச் தருமோ?

(5) பரத்துவாசர் ஆசிரமத்தில் நிகழ்ந்தசங்கதிகள் வால்மீகிக்கு எட்டுவது வெகு சுலபமன்றோ? போக்குவரவு இடசமீபம் முதலியனவற்றால், அங்குள்ள தவசிகள் இங்கு வருவதும், இங்குள்ளோர் அங்குப்போவதும் அசாதாரணமன்று. மற்றும் இராமர், பரதனிடம் தூதனுக்கு என்ன சொல்லியனுப்பினுரென்னும் விஷயம் யாவரும் முக்கியமாய்க் கவனிக்கக் கூடியதன்றோ? இராமர் மணல் லிங்கம் சமுத்திரக்கரையில் வைத்துப் பூசித்தது, அவர் செய்த சந்தியாவந்தனத்தைக் காட்டிலும் மிகவும் விசேடமில்லையாதலால், இதுவும், அயோத்திக்குச் செல்லலாமா வேண்டாமாவெனப் பரத்துவாசர் ஆசிரமத்திலிருந்து யோசித்து அநுமாரை இராமர் அனுப்பியதும் ஒன்றாகுமா? சிவபக்தன் மணல் குவித்துச் சிவலிங்க பூசை செய்வது உலகவியலில் யாரும் கவனிக்கத்தக்கதுமன்று. சொல்லிக்கொள்ளக்கூடியதுமன்று. அரசுக்குப்போவதா வேண்டாமா என்னும் செய்தியை ஒருவரும் கவனியாது விடார். ஆகையால் இவ்விரண்டையும் ஒரு சமனில் கொள்ளலாகாது.

கம்பர் கவிப்பேரரசராய் காளதுவரையில் விளங்குவதாலேயே, கம்பராமாயணம் ஆராய்ச்சிசெய்ய நேர்ந்தது. இன்றேல் இக்காலத்தில் வெளிவரும் நூல்கள் போல் அவர் இராமாயணம் கேள்வியற்று நிற்கும். நமது நாட்டில் சிவபெருமானே பாடிய பாடலாயிருந்தாலும், குற்றமிருப்பின் சமயாபிமானம், தேசாபிமானம், பாஷாபிமானம் அனையவற்றை ஒருபுறம் ஒதுக்கிக் குற்றத்தை எடுத்துக்காட்டுவது மரபாதலால், 'வால்மீகியையேபின்பற்றி யாவும்கூறினே'னென்னும் இக்கவி, அவ்வாறு செய்யத் தவறினுரென்பதை ஆராய்ச்சியில் புகுவோர் காட்டவேண்டிய கடமையன்றோ?

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்

"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)

குமார் 300 போலிகள் ஏமாற்றும்.

நஞ்சன்கூடு பல்பொடி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்தது) டப்பி

ம.டீ.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

காஸ்டார

ஜ்வரேக் ஜ்வரங்களுக்கும்

[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office:

NATIONAL INSURANCE BUILDING, 362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.

All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers*.

Consult NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,

Head Office:—

NATIONAL INSURANCE BUILDING, 362, China Bazar Rd, Esplanade, Madras.

for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers*.

யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஞ ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.

யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.

யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. } அல்லது { இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 58வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! இனும்!!

"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"

இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)